# உடன்படிக்கையின் தூதன்

---

## THE ANGEL OF THE COVENANT

54-0301

திங்கட்கிழமை மாலை, மார்ச் 1, 1954

ஸ்கையட் அரங்கம், ஃபீனிக்ஸ், அரிசோனா, அமெரிக்கா

**சகோ.வில்லியம் பிரன்ஹாம்**

# செய்தி: 54-0301 -
# உடன்படிக்கையின் தூதன்

மாலை வணக்கம் நண்பர்களே. இன்று இரவு மீண்டும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில், முழு இருதயத்தோடும் அவருக்கு ஊழியம் செய்ய இங்கு வந்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த விதத்தில் அவருக்கு ஊழியம் செய்ய நாங்கள் வருவது மிகுந்த மகிழ்ச்சியோடுதான். இந்தத் திங்கள் கிழமை இரவிலே, இவ்வளவு அருமையான கூட்டத்தைக் காண்பது எனக்கு மிகவும் நன்றியுள்ளதாய் இருக்கிறது. நேற்று இரவு, அமருவதற்கு இடமில்லாததால், வெளியே நின்ற அநேகர் திருப்பி அனுப்பப்பட்டார்கள் என்று கேள்விப்பட்டபோது, அது அநேகரை சோர் வடையச் செய்திருக்கும் என்று நினைத்தேன். ஆனால் இன்றிரவு நீங்கள் மீண்டும் வந்திருக்கிறீர்கள். உங்களுக்காக நான் நன்றியுள்ளவனாய் இருக்கிறேன். தேவன்

உங்களை ஆசீர்வதித்து, உங்கள் இருதயத்தின் விருப்பத்தை உங்களுக்குக் கட்டளையிடுவாராக. பீனிக்ஸ் நகரத்தில் நாம் நீண்ட காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்தப் பழைய பாணியிலான எழுப்புதல் நமக்கு உண்டாகும் என்று நான் நம்புகிறேன். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

இப்போது, இந்தக் கூட்டங்கள் எனக்குச் சற்று சோர்வை ஏற்படுத்துகின்றன, அதை நீங்கள் அறிவீர்கள். தரிசனம் காண்பது மனித சரீரத்திற்குச் சற்றுக் கடினமானது; இது யுகங்களூடாக அப்படித்தான் இருந்து வந்துள்ளது. இன்றிரவும் அது அப்படியே இருக்கிறது.

நாம் மகிமையின் சரீரத்தைப் பெறும் வரை அது அநேகமாக அப்படித்தான் இருக்கும். அப்போது நம்மால் புரிந்துகொள்ள முடியும். ஆனால் மனிதனாய் இருப்பதால், சில நேரங்களில் கர்த்தர் ஏன் அந்த முறையில் கிரியை செய்கிறார் என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிவதில்லை.

2. இந்த வாரத்தில் ஒரு நாள் இரவு, கர்த்தருக்குச் சித்தமானால், "தேவனின் நிபந்தனையற்ற உடன்படிக்கை" (God's Unconditional Covenant) என்ற தலைப்பில் ஒரு சுவிசேஷச் செய்தியைப் பேச விரும்புகிறேன். ஒருவேளை நாளை இரவாக இருக்கலாம், கர்த்தருக்குச் சித்தமானால்...

இது மக்களின் விசுவாசத்தைக் கட்டியெழுப் புவதற்கும், அவர்களிடமிருந்து எல்லா பயத்தையும் நீக்கி அவர்களை ஒரு நிலைக்குக் கொண்டு வருவதற்கும் மட்டுமே. அதைச் செய்வதற்கு நாங்கள் எங்களால் முடிந்தவரை முயற்சிக்கிறோம்.

கிறிஸ்தவனுக்கு உலகத்தில் ஒரு கவலையும் இல்லை. உலகிலேயே மிகவும் சுதந்திரமான, மகிழ்ச்சியான மக்களாக அவர்கள் இருக்க வேண்டும். ஏனென்றால் இழப்பதற்கு ஒன்றுமில்லை... உங்களால் இழக்க முடியாது. தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது.

அப்படியிருக்க நம்மால் எப்படி இழக்க முடியும்? இழப்பதற்கு ஒன்றுமில்லை,

இல்லையா? நாம் இயேசு கிறிஸ்துவுக்குள் நங்கூரமிடப் பட்டிருக்கிறோம், மகிமையான வீட்டிற்குச் செல்கிறோம், போகும் வழியில் மகிழ்ச்சியாக இருக்கிறோம், தேவன் நமக்காக எல்லாவற்றையும் வழங்குகிறார். அற்புதம்.

3. இங்கே அமர்ந்திருப்பது சிறிய சகோதரன் ஜோ அல்லவா? நான்... பல வருடங்களுக்குப் பிறகு அவரை இப்போதுதான் பார்க்கிறேன், சகோதரர் ஜோ. நீங்கள் ஸ்பானிஷ் சபையில் இருந்தீர்கள்.

எனக்கு உங்களை நினைவிருக்கிறது. ஆ, நாம் மகிமைக்குச் சென்று அப்படிப் பார்க்கும்போது, நமக்குத் தெரிந்த ஒரு முகத்தைப் பார்ப்பது எப்படி இருக்கும் என்று நான் ஆச்சரியப்படுகிறேன். என்னுடைய எதிர்பார்ப்புகள் அப்படிப் பட்டதாகவே இருக்கின்றன...

உலகம் முழுவதும் பயணம் செய்து, உலகம் முழுவதும் உள்ள அநேக பசியுள்ள மக்களையும், உலகெங்கிலும் உள்ள உண்மையான பக்தியுள்ள கிறிஸ்தவர்களையும் பார்த்த பிறகு, மீட்கப்பட்ட மனுக்குலம்

முழுவதும் ஒரே பெரிய பந்தியில் அமரும் அந்த நேரத்தை நான் நினைத்துப் பார்க்கிறேன். அந்தப் பெரிய வரவேற்புப் பந்திக்கு நாம் வரும் அந்த நேரத்தை நினைத்துப் பாருங்கள். ஆயிரம் மைல் தூரத்திற்கு, அந்தப் பந்தியில் பரிசுத்தவான்கள் மட்டுமே அமர்ந்திருப்பதை நீங்கள் காண்பீர்கள்.

4. பந்தியின் மறுபுறம் ஒருவரையொருவர் பார்ப்போம், அங்கே யுத்த வடுக்களைக் கொண்ட பழைய போர்வீரர்கள் இருப்பார்கள். நாம் மகிமையின் தேசத்திற்குள் நுழையும்போது செய்யப்போகும் முதல் காரியம், கல்யாண விருந்தை உண்பதுதான். இயேசு சொன்னார், "என் பிதாவின் ராஜ்யத்திலே உங்களோடேகூட நான் இதைப் புதிதாகப் பானம்பண்ணுவேன்." அதுதான் முதல் காரியம்.

ரெபேக்கா ஈசாக்கைச் சந்திக்க வந்ததும், அவள் அவரை வயல்வெளியில் சந்தித்ததும், தகப்பனுடைய கூடாரத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுத் திருமணம் செய்துகொண்டதும் எவ்வளவு அழகான சித்திரம். உணவு பரிமாறப்பட்டது மற்றும் பிற காரியங்கள் எப்படி நடந்தன.

நாம் வீட்டிற்குச் செல்லும்போது, கல்யாண விருந்து அப்படியே இருக்கும். நான் மேஜையின் குறுக்கே பார்த்து, பீனிக்ஸ் மற்றும் பல இடங்களைச் சேர்ந்த பழைய போர்வீரர்களைப் பார்க்கும்போது, நாம் ஓரிரு சொட்டு கண்ணீர் விடுவோம், இல்லையா? மேஜையின் குறுக்கே கையை நீட்டி, "ஓ..." என்று சொல்வோம். எவ்வளவு அற்புதமான நேரம். ஒவ்வொருவரும் தங்கள் கைகளை நீட்டி, அன்பு நிறைந்த இருதயத்தோடு, களத்தின் போர்வீரர்களாக இருப்பதை அங்கே கீழே பார்ப்போம்.

5. பின்னர் மகிமையின் ராஜா தமது மகிமையில் உள்ளே வருவதைக் காண்போம், அவர் தமது வெண்மையான அங்கியை அணிந்து நடந்து வருவார், வரிசையாக வந்து, ஒவ்வொருவரையும் அரவணைத்து, நம்மைத் தமக்கு நெருக்கமாக அணைத்துக்கொண்டு, தமது ஆணி பாய்ந்த கரங்களால் நம் கண்களிலிருந்து கண்ணீரைத் துடைத்து, "அழாதே. எல்லாம் முடிந்துவிட்டது.

நாம் இப்போது எல்லோரும் இங்கே இருக்கிறோம். உலகத்தோற்றம் முதல்

உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற கர்த்தருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி யுங்கள்" என்று சொல்வார். அந்த நாளுக்காகத் தான் நாம் காத்திருக்கிறோம். அதற்காகத்தான் நாம் போராடிக்கொண்டிருக்கிறோம்.

சமீபத்தில் ஒரு வானொலி ஒலிபரப்பைக் கேட்டேன், அதில் உலகின் பெரும்பாலான சிறந்த விஞ்ஞானிகள், உலகம் முழுமையாக அழிவதற்கு இன்னும் பத்து ஆண்டுகள் காலக்கெடு கொடுத்திருக்கிறார்கள். இன்னும் பத்து ஆண்டுகள், அது வெறும் ஊகம்தான்.

ஆனால் ஹைட்ரஜன் அல்லது ஆக்சிஜன், அவர்கள் அதைக் கொண்டு ஒரு யுத்தத்தைத் தொடங்கினால், ஒன்று இங்கே வெடிக்கும், அங்கே, இங்கே என்று வெடித்தால், என்ன நடக்கும் என்று எனக்குத் தெரியாது. அநேகமாக உலகம் முழுவதையும் வாரிச் சுருட்டிக் கொள்ளும், அதோடு எல்லாம் முடிந்துவிடும். மலையோ, மரமோ, பசுமையானதோ அல்லது பூமியில் எதுவுமே எஞ்சியிருக்காது. வேதாகமம் சொன்னது போலவே நடக்கும்.

6. ஆனால் அந்த நேரத்தில் நாம் போயிருப்போம். ஆம், ஐயா. அழியாத ஒரு பகுதி நம்மில் இருக்கிறது. அதற்கு அணுவோ, ஹைட்ரஜனோ அல்லது வேறு எதுவுமே தேவையில்லை. அது ஆவி. நாம் ஒரு நொடிப்பொழுதில், கண் இமைக்கும் நேரத்தில், ஆகாயத்தில் கர்த்தரைச் சந்திக்க எடுத்துக் கொள்ளப்படுவோம். கர்த்தருடைய வருகை மூன்று முறை இருக்கிறது, அது உங்களுக்குத் தெரியும்.

வேதத்தில் எல்லாமே மூன்று முறை இருக்கிறது. மூன்று என்பது கடவுளின் பூரண எண்: மூன்றுகள், ஏழுகள், பன்னிரண்டுகள், இருபத்தி நான்குகள், நாற்பதுகள், ஐம்பதுகள். ஆனால் அவர் மூன்று முறை வருகிறார்: ஒருமுறை தமது மணவாட்டியை மீட்க வந்தார்.

அடுத்த முறை அவர் வருகிறார், நாம் அவரை ஆகாயத்தில் சந்திக்கிறோம், தமது மணவாட்டியை ஏற்றுக்கொள்வதற்காக. அடுத்த முறை அவர் ஆயிரவருட அரசாட்சியில் தமது மணவாட்டியுடன் வருகிறார். அது கல்யாண விருந்து முடிந்த பிறகு. ஆயிரவருட அரசாட்சிக்காக நாம் திரும்ப வருகிறோம்.

நான் அவரைப் பார்க்க விரும்புகிறேன், நீங்கள் விரும்பவில்லையா? சில காலத்திற்கு முன்பு, ஒரு வயதான மனிதர் பேசிக்கொண்டிருந்ததை நான் கேட்டேன், அவர் ஒரு வயதான அடிமையைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். இதை நான் உங்களிடம் சொன்னேனா இல்லையா என்று தெரியவில்லை. அவருக்கு இரட்சிப்பு கிடைத்தது என்றும், கர்த்தர் அவரை இரட்சித்தார் என்றும், அவர்கள் அவரை விடுதலையாக்கினார்கள் என்றும் சொன்னார்.

அவர் இறக்கும் தறுவாயில் இருந்தபோது, அவர் வாசலுக்குள் பிரவேசித்து விட்டதாகவும், ஆனால் கதவுக்குப் பின்னால் நின்று கொண்டிருப்பதாகவும் சொன்னார். யாரோ ஒருவர் வந்து, "சாம், உள்ளே வந்து உன்னுடைய கிரீடத்தையும் உன்னுடைய வெகுமதியையும் இப்போது பெற்றுக்கொள்" என்று சொன்னார்.

அதற்கு அவர், "கிரீடமா? வெகுமதியா?" என்றார். "அந்தக் காரியங்களைப் பற்றி என்னிடம் பேசாதீர்கள். ஆயிரம் வருடங்கள் நின்று அவரைப் பார்க்க மட்டும்

அனுமதியுங்கள். அதுதான் நான் விரும்புவதெல்லாம்" என்றார்.

7. நாமும் அப்படித்தான் உணருகிறோம். எல்லா கிறிஸ்தவர்களின் உணர்வும் அதுதான் என்று நீங்கள் நினைக்கவில்லையா? எனக்கு எந்தக் கிரீடமும் வேண்டாம். எனக்கு எந்த வெகுமதியும் வேண்டாம். நான் அவரைப் பார்க்க விரும்புகிறேன். நான் அவரைப் பார்க்க விரும்புகிறேன். நின்று அவரைப் பார்த்தாலே போதும், அதுவே எனக்குப் போதும்.

பாதையின் முடிவில் அவர் என்னைக் குற்றவாளி என்று தீர்த்து, நான் வேறு வழியில் திரும்ப வேண்டும் என்று சொன்னாலும், நரகத்தில் அன்பு என்று ஒன்று இருக்குமானால், அப்போதும் நான் அவரை நேசிப்பேன். அவர் அப்போதும் நீதியுள்ளவரே. நான் இங்கே வந்தபோது ஒன்றுமில்லாதவனாய் இருந்தேன். நான் போகும் போதும் ஒன்றுமில்லாதவனாய் இருக்கிறேன். நான் எப்போதாவது அங்கே ஏற்றுக் கொள்ளப்பட்டால், அதைச் செய்தது அவருடைய கிருபை மட்டுமே.

அதனால்தான் இன்றிரவு நான் என் முழு இருதயத்தோடும் பிரயாசப்படுகிறேன். எல்லோரிடமும், எல்லா இடங்களிலும் அன்போடு இருக்கிறேன். நீங்கள் வேதப்பூர்வமாக என்னுடன் உடன்படாமல் இருக்கலாம். வேதத்தைத் தவிர எனக்கு அதிக உபதேசம் இல்லை. நான் கர்த்தரை நேசிக்கிறேன். அவ்வளவுதான். பாருங்கள், அவ்வளவுதான்.

எனவே, நீங்கள் சொல்லலாம், "சகோதரர் பிரான்ஹாம், நான் இதை நம்புகிறேன்." ஒருவேளை நான் அதைச் சரியாகப் பார்க்காமல் இருக்கலாம். ஆனால் அது உங்களைப் பற்றி நான் ஒரே மாதிரியாக நினைப்பதைத் தடுக்காது. பாருங்கள்? நாம் ஒருவரையொருவர் ஒரே மாதிரியாக நேசிக்கிறோம்.

8. யாத்திராகமம் 23-வது அதிகாரம், 20-வது வசனத்தை நாம் இன்றிரவு வாசிக்கத் தொடங்குகிறோம், கடிகாரம் இன்னும் கொஞ்சம் நகர்ந்து கூட்டத்தின் உணர்வை நாம் பெறும் வரை சில வார்த்தைகள் மட்டும். கூட்டங்களை உணருவது என்று ஒரு காரியம் இருக்கிறது.

எனக்கு ஞாபகம் இருக்கும் வரையில், கர்த்தருடைய தூதரின் அபிஷேகம் வரும்போது, அவர்கள் என்னிடம் சொல்லும் போதும்... சரி, எனக்கு அது நினைவில் இருப்பதில்லை, என்ன நடக்கிறது என்பது அவர்கள் சொல்லும் வரை, நான் கனவு கண்டது போல இருக்கும். எனக்கு ஞாபகம் இருக்கும் வரையில், நேற்று இரவு இங்கே சில கட்டில்களும் மற்றவைகளும் கிடந்தன.

இன்றிரவு அவைகள் இங்கே இல்லை. நாளை இரவு சக்கர நாற்காலிகள் எதுவும் இருக்காது என்று நம்புகிறேன்; மக்கள் தெருக்களில் சாதாரணமாகவும் சுகமாகவும் நடந்து கொண்டிருப்பார்கள். நீங்கள் விசுவாசித்தால் உங்களால் முடியும்.

இயேசு அதைச் செய்ய விரும்புகிறார். அவர் உங்கள் ஒவ்வொருவரையும் விடுவிக்க விரும்புகிறார். அப்பா, அவர் உங்களை அந்த நாற்காலியிலிருந்து வெளியே கொண்டுவர விரும்புகிறார். இங்கே வரும் இந்தப் பெண்ணை, வாழ்க்கையின் ஆரம்பத்தில் இங்கே அமர்ந்திருக்கும் இந்த இளம் மங்கையை அவர் சுகமாக்க விரும்புகிறார்.

நீங்கள் அங்கே இருப்பதை அவர் விரும்பவில்லை. நீங்கள் முன்பு இருந்தது போல் எழுந்து நடப்பதை அவர் விரும்புகிறார். நீங்கள் சுகமாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

9. தயவுசெய்து அவரை விசுவாசியுங்கள். உங்களுக்கு உதவ என்னால் முடிந்த ஏதேனும் இருந்தால், நான் அதைச் செய்வேன். ஒருவருக்கு உதவ என்னால் முடிந்த ஒரு காரியம் இருந்து அதை நான் செய்யாமல் இருந்தால், அதைச் செய்யாததற்கு நான் ஒரு மிருகமாக இருப்பேன்.

ஆனால் நான் இங்கே நம்முடைய கர்த்தரைப் பிரதிநிதித்துவப்படுத்த முயற்சிப்பதற்குக் காரணம், அவருடைய இரக்கத்தினால் இதைச் செய்ய என்னை அனுமதிப்பார் என்று நான் நம்புகிறேன், அவரைப் பார்க்கவும், அவரை விசுவாசிக்கவும், சுகமடையவும் உங்களுக்கு உதவ முடியும் என்று நான் நம்புகிறேன். பயப்பட வேண்டாம்.

அதுதான் காரணம்... நீங்கள் பெற்றுக்கொள்ள முடியாததற்குக் காரணம், அது நடக்காது என்று நீங்கள் பயப்படுவதால்தான்.

அது உங்கள் மனதிற்குள் ஏற்கனவே நடந்துவிட்டது போல இருக்க வேண்டும். பாருங்கள்? "விசுவாசமானது நம்பப்படு கிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது."

10. இப்போது, வேதாகமம் உங்களிடம் இருக்கும் என்று நான் நம்புகிறேன், தேவன் மோசேக்குக் கட்டளையிடுவதைப் பற்றிய ஒரு பகுதியை இங்கே வாசிக்க விரும்புகிறேன்.

இதோ, வழியில் உன்னைக் காக்கவும்... நான் ஆயத்தம்பண்ணின ஸ்தானத்துக்கு உன்னைக் கொண்டுபோய்ச் சேர்க்கவும், ஒரு தூதனை உனக்கு முன்பாக அனுப்புகிறேன்.

அவர் சமுகத்தில் எச்சரிக்கையாயிருந்து, அவர் வாக்குக்குச் செவிகொடு; அவரைக் கோபப்படுத்தாதே; உங்கள் மீறுதல்களை அவர் மன்னிக்கமாட்டார்; என் நாமம் அவருக்குள் இருக்கிறது.

நீ அவர் வாக்குக்கு உண்மையாய்ச் செவிகொடுத்து, நான் சொல்வதையெல்லாம் செய்தால், நான் உன் சத்துருக்களுக்குச்

சத்துருவாகவும், உன் விரோதிகளுக்கு விரோதியாகவும் இருப்பேன்.

என் தூதன் உனக்கு முன்பாகச் சென்று, எமோரியர், ஏத்தியர், பெரிசியர், கானானியர், ஏவியர், எபூசியர் இருக்கிற இடத்துக்கு உன்னை அழைத்துக்கொண்டுபோவார்; அவர்களை நான் அழித்துப்போடுவேன்.

அவர்களுடைய தேவர்களை நீ பணியாமலும் சேவியாமலும், அவர்கள் செய்கிறபடியே செய்யாமலும், அவர்களை நிர்மூலம்பண்ணி, அவர்கள் சிலைகளை உடைத்துப்போடக்கடவாய்.

உங்கள் தேவனாகிய கர்த்தரையே சேவிக்கக்கடவீர்கள்; அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார்; வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன்.

*11. இப்போது, இந்த வார்த்தையின் கர்த்தாவினிடத்தில் நாம் பேசும்போது நம் தலைகளைத் தாழ்த்துவோம்.*

*எங்கள் அன்புள்ள நல்ல பிதாவே, இன்றிரவு நன்றியுள்ள இருதயத்தோடு உமது அன்பான குமாரனாகிய இயேசுவின் நாமத்தில்*

உம்மை அணுகுகிறோம்; "நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் எதைக் கேட்டாலும், அதை நான் செய்வேன்" என்று அவர் வாக்குறுதி அளித்திருப்பதை அறிந்திருக்கிறோம். ஆகையால், நாங்கள் அவருடைய நாமத்தில் வந்தால், நாங்கள் கேட்பதைக் பெற்றுக் கொள்வோம் என்று நாங்கள் அறிவோம்.

ஏனென்றால், இயேசு கிறிஸ்துவின் மூலமாக தேவன் ஏற்படுத்திய வழியில் நாங்கள் வருகிறோம். எனவே, நாங்கள் பெற்றுக் கொள்வோம் என்று முழுமையான நிச்சயத்துடன் விசுவாசிக்கிறோம். இப்போது, ஆண்டவரே, இந்த நேரத்தில் உமது வார்த்தையைப் பேசுகிறவருக்கும் கேட்கிற வருக்கும் ஒரு விசேஷித்த அபிஷேகத்தைத் தருமாறு உம்மிடம் கேட்கிறோம்.

கேட்பவர் பெற்றுக்கொள்ளட்டும், அவர் ஒரு வழியைத் திறந்து, அவிசுவாசத்தின் வேர்களையும் கிளைகளையும் பிடுங்கி எறிவாராக. தேவனுடைய விதையாகிய படுக்கை அவருடைய இருதயத்தில் விதைக்கப்பட்டு, இன்றிரவே அது பெரிய

பலன்களைக் கொண்டு வரட்டும். ஆண்டவரே, இரக்கமாயிரும்.

இன்றிரவு நான் பேசுவதற்காக நீர் எனக்குக் கொடுத்திருக்கும் இந்தச் சிறிய கூட்டம், உமது இரத்தத்தால் சம்பாதிக்கப்பட்டது. நான் அவர்களை நேசிக்கிறேன். உமது நாமத்தில் அவர்களுடன் பேசுவதன் மூலம் அவர்களுக்குச் சில வழிகளில் உதவ என்னை அனுமதிக்குமாறு நான் ஜெபிக்கிறேன். உமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இதைக் கேட்கிறோம். ஆமென்.

12. தேவன் இங்கே மோசேக்குக் கட்டளையிடுகிறார். தேவன் இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து வாக்குத்தத்த தேசத்திற்கு எப்படிக் கூட்டிச் சென்றார் என்ற கதை உங்கள் பெரும்பாலானோருக்குத் தெரியும். ஆரம்ப நாட்களில் பஞ்சத்தின் மூலம் அவர்கள் எப்படி எகிப்துக்குக் கொண்டு செல்லப் பட்டார்கள்.

தேவன் ஆபிரகாமைச் சந்தித்து, வாக்குத்தத்தத்தையும் உடன்படிக்கையையும் கொடுத்து, அவருடைய சந்ததியினர் அந்நிய

தேசத்தில் சஞ்சரிப்பார்கள் என்றும், நானூறு ஆண்டுகள் அந்நியர்களாக இருப்பார்கள் என்றும், பின்னர் பலத்த கையினால் அவர்களை வெளியே கொண்டுவருவார் என்றும் சொன்னார். எப்பேர்ப்பட்ட அற்புதமான சிந்தனை. ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததிக்கும் ஒரு வாக்குத்தத்தமாகவும், நித்திய சுதந்தரமாகவும் கொடுத்த தேசத்திற்கு அவர்களைக் கொண்டு வருவேன் என்று அவர் அப்போது சொன்னார்.

13. பின்னர், பிதாக்கள் யோசேப்பை விற்றார்கள் என்பதை நாம் அறிவோம், அவர் கிறிஸ்துவின் மிகச் சரியான நிழலாட்டமாக இருந்தார். அவர் தகப்பனால் நேசிக்கப்பட்டார், சகோதரர்களால் வெறுக்கப்பட்டார், ஒரு பொதுவான... சரி, யோசேப்புக்குள் இருந்தது கிறிஸ்துவே.

அவர் ஆவிக்குரியவராக இருந்ததால், அவர்கள் முகாந்திரமில்லாமல் அவரைப் பகைத்தார்கள். அவர் பிறப்பிலேயே ஒரு ஞானதிருஷ்டிக்காரராக இருந்தார். அவர் தரிசனங்களைக் கண்டார், கனவுகளைக் கண்டார், அவைகளுக்கு அர்த்தம் சொன்னார். அவர் தனது மற்ற சகோதரர்களை விட

ஆவிக்குரியவராக இருந்தார். அதனால் அவர்கள் முகாந்திரமில்லாமல் அவரைப் பகைத்தார்கள்.

தேவன் அவரோடு இருந்ததால், அவர்கள் அவரை அதிகமாக நேசித்திருக்க வேண்டும். தேவன் யாருடன் இருக்கிறாரோ அவர்களுக்கு உதவி செய்யுங்கள், நீங்கள் எப்படிச் செழிக்கிறீர்கள் என்று பாருங்கள். தேவன் எப்போதும் தனது குமாரனாகிய கிறிஸ்து இயேசுவுடன் இருக்கிறார். அது உங்களுக்குத் தெரியும். எனவே அவருக்கு உதவி செய்யுங்கள், நீங்கள் எப்படிச் செழிக்கிறீர்கள் என்று பாருங்கள்.

14. அதற்குப் பதிலாக, அவர்கள் அவரைப் பகைத்தார்கள், அவர்மேல் பொறாமை கொண்டார்கள், இது இன்றைக்கு மிக அழகான ஒரு நிழலாட்டம், ஆவிக்குரிய சபை எந்த காரணமும் இல்லாமல் ஒன்றுவிட்ட சகோதரனால் வெறுக்கப்படுகிறது. நமக்கு ஒரு பெரிய எழுப்புதல் இருப்பதைக் குறித்து அவர்கள் அன்பாக இருக்க வேண்டிய இடத்தில். அதற்காக எல்லோரும் தேவனை நேசித்திருக்க வேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக, முகாந்திரமில்லாமல்...

அவர் அவருக்குப் பல வர்ண அங்கியைத் கொடுத்தார் என்பதை நீங்கள் கவனியுங்கள். இப்போது, ஏழு பூரண வர்ணங்கள் மட்டுமே உள்ளன. அந்தப் பூரண வர்ணங்கள் வானவில்லில் உள்ள ஏழு வர்ணங்கள். ஒருவேளை, வானவில் கிறிஸ்துவின் நிழலாட்டமாக இருக்கலாம்.

உயிர்த்தெழுதலுக்குப் பிறகு யோவான் அவரைச் சிங்காசனத்தில் வீற்றிருக்கக் கண்டார், அவரைப் பார்ப்பதற்குப் பத்மராகம் மற்றும் வச்சிரக்கல் போல இருந்தார், அது பென்ஜமின் மற்றும் ரூபன், முந்தினவரும் பிந்தினவரும், இருந்தவரும் இருக்கிறவரும் வரப் போகிறவருமானவர். தாவீதின் வேரும் சந்ததியும், விடிவெள்ளி நட்சத்திரம், சாரோனின் ரோஜா, பள்ளத்தாக்கின் லீலி, அல்பாவும் ஒமேகாவும். அவர் அங்கே தனது தலைக்கு மேல் ஒரு வானவில்லுடன் அமர்ந்திருக்கிறார்: ஒரு உடன்படிக்கை.

"வானவில்" என்றால் "உடன்படிக்கை" என்று பொருள். நோவாவுக்கு ஒரு உடன்படிக்கையாகத் தேவன் வானவில் அடையாளத்தைக் கொடுத்தார். மேலும் அவர்

இயேசு கிறிஸ்துவுடன் உலகுக்கு ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தினார். "அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைவான்."

15. இப்போது, யோசேப்பு பல வர்ண அங்கி அணிந்திருந்தார், அநேகமாக ஒரு வானவில். பின்னர் அவருடைய சகோதரர்களால் வெறுக்கப்பட்டார். கொல்லப்பட்டு ஒரு குழியில் எறியப்பட வேண்டும் என்று கருதப் பட்டார், அவருடைய சொந்த சகோதரர் களாலேயே, இயேசு எப்படிக் கொல்லப்பட்டுத் தமது சொந்த ஜனங்களாலேயே குழியில் எறியப்பட்டாரோ அப்படியே.

ஆனால் யோசேப்பு மேலே எடுக்கப்பட்டு, உலகின் மிகப்பெரிய வர்த்தக மற்றும் இராணுவ நாடான பார்வோனின் வலது பாரிசத்தில் அமர்த்தப்பட்டார். யோசேப்பின் மூலமாக அன்றி எவனும் பார்வோனிடம் வர முடியாது. இயேசு கல்லறையாகிய குழியிலிருந்து மேலே எடுக்கப்பட்டு, உன்னதத்திலுள்ள மகத்துவத்தின் வலது பாரிசத்தில் அமர்த்தப்பட்டார், "குமாரனைத் தவிர வேறொருவனும்

பிதாவினிடத்தில் வரான்." குமாரனைத் தவிர எவனும் வர முடியாது.

அவர் சிறையில் இருந்தபோது அவருக்கு ஏற்பட்ட சோதனையைக் கவனியுங்கள். அவரது தாடி வளர்ந்திருந்தது. அங்கே ஒரு பானபாத்திரக்காரனும் சுயம்பாகியும் இருந் தார்கள். அவர்கள் ஒரு கனவு கண்டார்கள், யோசேப்பு கனவுக்கு அர்த்தம் சொன்னார். அவர்களில் ஒருவன் இழக்கப்பட்டான், ஒருவன் இரட்சிக்கப்பட்டான்.

16. இயேசு மரணத்தின் சிறைச்சாலையான சிலுவையில் அறையப்பட்டபோது, ஒரு கள்ளன் இழக்கப்பட்டான், மற்றவன் இரட்சிக்கப் பட்டான். அவர் தமது சரீரத்தை ஒரு சாட்சியாக அல்லது அடையாளமாக எப்படிக் கொடுத்தார் என்பதற்கு இது ஒரு சரியான நிழலாட்டம். அவர் இறக்கும் போது, "இப்போது, ஒரு நாள் தேவன் நிச்சயமாக உங்களைச் சந்திப்பார்" என்று சொன்னார். அவர் தனது எலும்புகளை ஒரு பழைய பெட்டியில் விட்டுச் சென்றார்.

எகிப்தில் கிடந்த யோசேப்பின் எலும்புகளைக் கொண்டு வந்த ஒரு

அருங்காட்சியகத்தில், சமீபத்தில், அந்தப் பெட்டியின் மீது என் கையை வைத்திருக்க வேண்டியிருந்தது, அது தட்டப்பட்ட ஈயத்தால் செய்யப்பட்டிருந்தது, சுமார் இவ்வளவு தடிமன். பிரபலமான ஸ்கோன் கல் (Stone of Scone) எனக்கு பெட்ஃபோர்ட் கல் துண்டு போலத் தோன்றியது, அது ஒரு பழைய பழங்கால நாற்காலியின் அடியில் வைக்கப்பட்டிருந்த ஒரு சிறிய பொருள்.

எப்படியிருந்தாலும், இது எகிப்திற்குள் இறங்கிச் செல்கிறது... யோசேப்பு, அவர் இறந்தபோது ஒரு நினைவுச் சின்னத்தை விட்டுச் சென்றார், அது அவருடைய எலும்புகள், அவர்கள் ஒரு நாள் வெளியே போவார்கள் என்பதைத் தெரியப் படுத்துவதற்காக: அந்த எலும்புகள் அழிவதற்கு முன்பே, அவர்கள் வெளியே போவார்கள்.

17. நான் இங்கே ஒரு கணம் நிறுத்த விரும்புகிறேன். வேதாகமம் ஏவுதலினால் கொடுக்கப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியும். நீங்கள் பள்ளிகளில் அதை சும்மா கற்றுக்கொள்ள முடியாது. அது பரிசுத்த ஆவியின் வெளிப்பாட்டின் மூலம் வர

வேண்டும். நீங்கள் எவ்வளவு புத்திசாலியாகவும் விவேகியாகவும் இருந்தாலும், பரிசுத்த ஆவியானவரே தேவனுடைய வார்த்தையை வெளிப்படுத்துகிறார்.

இயேசுவின் நாட்களில் இருந்த அந்தப் பரிசேயர்கள், சதுசேயர்கள் மற்றும் போதகர்கள், குறையற்ற பரிசுத்தவான்கள், அறிஞர்கள், லேவியர் என்ற குறிப்பிட்ட வம்சாவளியில் பிறந்திருக்க வேண்டியவர்கள். சிறுவயது முதல் வேதவசனங்களில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும், ஒவ்வொரு அர்த்தத்தையும் அறிந்திருக்க வேண்டும், ஆனால் முழு வேதவசனமும் அவருடைய வருகையைப் பற்றி நிறைந்திருந்தும், இயேசுவைக் காணவும் அவரை அடையாளம் கண்டுகொள்ளவும் தவறினார்கள். நான் சொல்வது புரிகிறதா?

18. எனவே கல்வியின் மூலமாகவோ அல்லது இறையியலின் மூலமாகவோ தேவனை அறியலாம் என்று எதிர்பார்க்காதீர்கள்; மறுபடியும் பிறப்பதன் மூலம், அதாவது புதிய பிறப்பின் மூலம் நீங்கள் தேவனை அறிகிறீர்கள். பரிசுத்த ஆவியானவரே தேவனுடைய வார்த்தையை எழுதினார்.

அவர் அதை உள்ளே மிகவும் சிக்கலாக வைத்திருக்கிறார்; "ஞானிகளுக்கும் கல்விமான் களுக்கும் இவைகளை மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்துவேன்" என்று அவர் சொன்னார். எனவே நீங்கள் எதையாவது தெரிந்து கொள்ள விரும்பினால், குழந்தையாக இருங்கள். அதிக புத்திசாலியாக இருக்காதீர்கள். மேலே செல்லும் வழி கீழே இறங்குவதுதான். "தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்."

வேதாக மத்தை எழுதுவதைப் பற்றி நான் நினைக்கிறேன், பரிசுத்த ஆவியானவர் அந்த இரகசியங்களை அதற்குள் எப்படி மறைத்தார். எல்லா வேதாகமப் பள்ளிகளாலும் செமினரி களாலும் அதை ஒருபோதும் வெளியே எடுக்க முடியாது. தேவனுக்கு மட்டுமே அது தெரியும், அவர் விரும்புகிறவர்களுக்கு அதை வெளிப்படுத்துவார். அது சரியா?

19. நான் வெளிநாட்டில் இருக்கும்போது, திருமதி பிரான்ஹாம், நான் அவளை எவ்வளவு நேசிக்கிறேன் என்று தேவனுக்குத் தெரியும், அவள் எனக்கு ஒரு கடிதம் எழுதுவாள். அவள், "அன்புள்ள பில், நான் இன்றிரவு இங்கே

அமர்ந்து உன்னை நினைத்து, உனக்காக ஜெபிக்கிறேன். குழந்தைகள் இப்போதுதான் படுக்கைக்குச் சென்றார்கள்.

நாங்கள் உன்னை மிகவும் இழக்கிறோம் (miss you)" என்று எழுதுவாள். இப்போது, அவள் சொல்வதை நான் வாசிக்கிறேன், ஆனால் வரிகளுக்கு இடையிலும் நான் வாசிக்கிறேன், ஏனென்றால் நான் அவளை நேசிக்கிறேன். அவள் என்னை நேசிக்கிறாள். அது ஒரு காதல் விவகாரம். அவள் அதை எழுதுவது வரிகளில் மட்டுமல்ல, வரிகளுக்கு இடையில் என்ன இருக்கிறது என்பது எனக்குத் தெரியும்.

இப்போது, நீங்கள் கிறிஸ்துவின் மீது அன்பு கொள்ளும்போது, வேதாகமத்தை அப்படித்தான் வாசிப்பீர்கள். அது வரிகளுக்கு இடையில் உள்ளது. அவர் எதைப் பற்றிப் பேசுகிறார், உண்மையான ஆவிக்குரிய அர்த்தம் என்ன என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள். உதாரணமாக, நாம் இதைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதால், இப்போது என் மனதில் வந்த ஒரு சிறிய உதாரணத்தை எடுத்துக்கொள்வோம்.

20. யோபு, வயதான... தேவன் அவரைச் செழிக்கப் பண்ணியிருந்தார், பிசாசு அவருக்கு என்ன செய்யப் போகிறான் என்று சொன்னான்; அவன் செய்தான்: அவனுடைய எல்லா செல்வங்களையும் பறித்தான், அவனை ஏழையாக்கினான், அவன் குழந்தைகளைக் கொன்றான், அவன் கால்நடைகளை எரித்தான், அவன் உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரை கொப்பளங்களால் தாக்கினான்.

அவன் வெளியே உட்கார்ந்திருந்தான்... அவனால் வீட்டுக்குள் கூட இருக்க முடியவில்லை, அநேகமாக அவனுடைய கொப்பளங்களிலிருந்து வந்த துர்நாற்றம் அவ்வளவு மோசமாக இருந்திருக்கலாம். அவன் சாம்பல் மேட்டில் உட்கார்ந்திருந்தபோது, ஒரு ஓட்டினால் தன்னைச் சுரண்டிக் கொண்டிருந்தான்.

அங்கே உட்கார்ந்திருந்தபோது, அவனுடைய சபைச் சகோதரர்கள் அவனிடம் வந்து ஏழு நாட்கள் தங்கள் முதுகைத் திருப்பிக் கொண்டார்கள் (அது என்ன ஆறுதல்?), "யோபு, நீ பாவம் செய்திருக்கிறாய்" என்று சொன்னார்கள். மக்கள் நோய்வாய்ப்

பட்டிருப்பதால், அவர்கள் பாவம் செய்திருக்கிறார்கள் என்று அநேகர் நினைக்கிறார்கள்.

தேவன் வியாதியினாலும் பாவத்தினால் வரும் வியாதியினாலும் இடை படுகிறார், ஆனால் எல்லா சந்தர்ப்பங்களிலும் அப்படி இல்லை. இந்தச் சூழ்நிலையில் அவர் திருத்திக் கொண்டிருந்தார், அல்லது திருத்தவில்லை, ஆனால் அவர் ஒரு விசுவாசியின் குணாதிசயங்களை வெளியே கொண்டு வந்து கொண்டிருந்தார்.

21. அங்கே யோபு அந்தக் கொப்பளங்களைச் சுரண்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அவனுடைய மனைவி வந்து, "யோபு, நீ பரிதாபமாக இருக்கிறாய். நீ ஏன் தேவனைத் தூஷித்து சாகக்கூடாது? ஏன், நீ ஜெபித்தாய்; நீ எல்லாவற்றையும் செய்தாய், நீ அந்தக் கொப்பளங்களைச் சுரண்டிக் கொண்டு அங்கே உட்கார்ந்திருக்கிறாய்.

கடந்து செல்லும் எல்லோரும் உன்னைப் பார்த்துச் சிரிக்கிறார்கள். நீ ஒரு சிரிப்புப் பொருளாகிவிட்டாய். தேவன் நிச்சயமாக இனி

ஜெபத்திற்குப் பதில் கொடுப்பதில்லை," என்பது போலச் சொன்னாள். அந்தப் பழைய பிதா அவளை நிமிர்ந்து பார்த்து, "நீ ஒரு பைத்தியக்காரி பேசுவது போல் பேசுகிறாய்" என்று சொன்னதை என்னால் பார்க்க முடிகிறது.

அது அற்புதம். இப்போது, அவள் பைத்தியக்காரி என்று அவன் சொல்லவில்லை; யாரோ ஒரு பைத்தியக்காரி பேசுவது போல் அவள் பேசினாள் என்று சொன்னான். "கர்த்தர் கொடுத்தார். கர்த்தர் எடுத்தார். கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக" என்று சொன்னான். அதுதான்: உறுதியாக இருப்பது.

22. சில நேரங்களில், தேவனுடைய வாக்குறுதியை நீங்கள் சொந்தம் கொண்டாடும் போது, உங்கள் சொந்த வீட்டாரில் உள்ளவர்களே உங்களை முதலில் சோர்வடையச் செய்பவர்களாக இருப்பார்கள். ஆனால், நீங்கள், நீங்கள் அல்லது இன்றிரவு இங்கே இருக்கும் யாராக இருந்தாலும், இந்தக் கூட்டத்திற்கு வருவதற்கு எவ்வளவு ஆழமான நேர்மையுடன் இருக்கிறீர்களோ, அத்தகைய ஆழ்ந்த நேர்மையுள்ள எந்த மனிதனுக்கும் தேவன் கடமைப்பட்டிருக்கிறார். நீங்கள் உங்கள்

முயற்சியைச் செய்திருந்தால், தேவன் தனது முயற்சியைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்.

கிழக்கிலிருந்து எலிகூ என்ற சிறிய இளவரசன் வந்தான். அந்த வார்த்தையை உடைத்துப் பார்க்க நமக்கு நேரம் இருந்தால் நன்றாக இருக்கும்: ஏலா, ஏலா, லா, தேவன், யாவே. அதை உடைத்து, தேவனுடைய பிரதிநிதியை உங்களுக்குக் காண்பித்தால், அது உண்மையில் கிறிஸ்துவைக் குறிக்கிறது, அவர் யோபுவின் ஆழ்ந்த துன்பத்தில் அவனிடம் இறங்கி வந்தார்.

அவர் யோபு ஒரு இரகசிய பாவி என்று குற்றம் சாட்டவில்லை. அவர் அவனிடம் சொல்லத் தொடங்கினார், அதைப் பற்றி அல்ல... அவர் சொன்னார், "இப்போது பார், யோபு (குழந்தைகள் புரிந்துகொள்ளும் வகையில் நாம் இதை உடைத்துப் பார்ப்போம்.), நீ யோசித்தாய்," 14-வது அதிகாரத்தில், யோபு எழுதும்போது சொன்னது போல...

"மரத்தைப் பார். அது விழுகிறது. காற்று அதை வீழ்த்துகிறது. ஏன், அது மீண்டும் வளர்கிறது." "பூவிலிருந்து ஒரு சிறிய விதை

கீழே விழுகிறது, மழைகள் வந்து ஒரு இறுதி ஊர்வலம் நடத்தி அதைப் புதைக்கின்றன... அது மண்ணில் அழுகுகிறது.

அந்தச் சிறிய விதை உடைகிறது, அதிலுள்ள கூழ் வெளியேறுகிறது. சிறிது நேரத்திற்குப் பிறகு விதை போய்விடுகிறது; கூழ் போய்விடுகிறது, பூ போய்விடுகிறது, தண்டு போய்விடுகிறது." அது அதன் முடிவு அல்ல. அங்கே மீண்டும் உயிர்வாழக்கூடிய ஒரு ஜீவ அணு (germ of life) இருக்கிறது.

23. சில காலத்திற்கு முன்பு, நான் ஸ்பர்ஜன் என்ற பெயருள்ள ஒரு வயதான மெத்தடிஸ்ட் போதகருடன் அமர்ந்திருந்தேன். நாங்கள் இருவரும் சேர்ந்து ஐஸ்கிரீம் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம், அப்போது விவசாய நேரம் வந்தது, சிறிய 4-H கிளப். உங்களில் பலர் இங்கே அதைச் சார்ந்திருக்கிறீர்கள். அல்லது ஒருவேளை நீங்கள் இருக்கலாம்.

சோள மணிகளை மிகத் துல்லியமாக உருவாக்கும் ஒரு இயந்திரத்தை அவர்கள் பெற்றிருந்தார்கள், இயந்திரத்தால் உருவாக்கப் பட்ட பையிலிருந்து ஒரு கைப்பிடியையும்,

வயலில் விளைந்த பையிலிருந்து ஒரு கைப்பிடியையும் எடுத்து இரண்டையும் ஒன்றாகக் கலந்தால், உங்களால் மீண்டும் அவைகளை வித்தியாசப்படுத்திக் கண்டு பிடிக்கவே முடியாது. அவற்றை ஆய்வகத்திற்கு எடுத்துச் சென்று வெட்டிப் பார்த்தால், அந்தப் பெரிய கண்ணாடிகளின் கீழ் தோல் ஒரே தடிமனாகத் தெரியும்.

24. சரியான அளவு ஈரப்பதம், அதே அளவு கால்சியம் மற்றும் அதில் சென்ற ஒவ்வொரு மூலப்பொருளும் இருந்தது. இதயம் சரியான இடத்தில் இருந்தது. அது அதே அளவுக்குச் சிறந்த சோளப் பலகாரங்களை (corn patties) உருவாக்கும். இது அதே அளவுக்குச் சிறந்த கார்ன் ஃப்ளேக்ஸை (corn flakes) உருவாக்கும், மற்றொன்றைப் போலவே சாப்பிட நன்றாக இருக்கும். "அவற்றுக் கிடையேயான வித்தியா சத்தைக் கண்டறிய ஒரே வழி," அவர் சொன்னார், "அவற்றைப் புதைப்பதுதான்." மனிதன் உருவாக்கியது அழுகிப்போனது, அதுதான் முடிவு. ஆனால் தேவன் உருவாக்கியதில் ஒரு ஜீவ அணு இருந்தது. அது மீண்டும் உயிர்த்தெழுந்தது.

நான் சொன்னேன், "சகோதரர் ஸ்பர்ஜன், நீங்கள் என் கையைப் பிடித்துக் கொள்வது நல்லது. நான் உங்களுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தலாம்." சரி, அது யாரையும்... அது ஒரு பாப்டிஸ்டையோ அல்லது ஒரு மெத்தடிஸ்டையோ, யாராக இருந்தாலும் சத்தமிட வைக்கும், இல்லையா? பாருங்கள், இரண்டு பேர் சபையைச் சார்ந்திருக்கலாம், ஒருவர்-இருவரும் ஒரே மாதிரி இருக்கலாம், ஒருவருக்கொருவர் இரத்த தானம் செய்யலாம், ஆனால் ஒருவருக்கு நித்திய ஜீவன் இருக்கிறது, மற்றவருக்கு இல்லை. இருவரும் சபைக்குச் செல்கிறார்கள், தசமபாகம் செலுத்துகிறார்கள், இருவரும் மதப் பற்றுள்ளவர்கள். ஆனால் ஒருவருக்கு ஜீவன் இருக்கிறது, ஒருவருக்கு இல்லை. நான் சொல்வது புரிகிறதா?

25. யோபு அதைக் கவனித்தான், அந்த ஜீவ அணு மீண்டும் வருவதை. அவன் சொன்னான், "ஆனால் ஒரு மனிதன் தன் கல்லறைக்குச் செல்கிறான். அவன் குமாரர் கனவடைகிறார்கள், அவன் அதை அறிகிறதில்லை. அவர்கள் சிறுமைப்படுகிறார்கள், அவன் அதை உணருகிறதில்லை."

"உமது கோபம் தீருமட்டும் நீர் என்னைப் பாதாளத்தில் ஒளித்து வைத்தால் நலமாயிருக்கும்" என்றான். எலிகூ, இந்த வழியில் அவனிடம் வந்தார். "இப்போது, யோபு..." இதோ, இங்கே இருக்கிறது, "யோபு, அந்தப் பூ பாவம் செய்யவில்லை. அதனால்தான் அது இறந்து மீண்டும் வருகிறது, இறந்து மீண்டும் வருகிறது. ஆனால் மனிதன் படுத்துக் கொள்கிறான்; அவன் மீண்டும் வருவதில்லை."

ஆனால் அவர் சொன்னார், "ஒரு நாள் நீதிபரர் ஒருவர் வருவார், அவர் திறப்பிலே நிற்கவும், பாவியான மனிதனுக்கும் பரிசுத்த தேவனுக்கும் இடையில் தன் கையை வைக்கவும், வழியை இணைக்கவும் வல்லவராக இருப்பார். அவரே ஜீவ இணைப்பாக இருப்பார். அப்போது மனிதன் உயிர்த்தெழுவான்." ஓ, ஆச்சரியம்.

26. அதன் பிறகு யோபுவுக்கு அதிகம் தேவைப்படவில்லை. அவனுக்கு இனி ஊக்கப்படுத்த வேண்டிய அவசியமில்லை. அவன் ஒரு தீர்க்கதரிசி. தேவனுடைய ஆவி தீர்க்கதரிசியின் மேல் வந்தது. அவன் தனது சாம்பல் மேட்டிலிருந்து எழுந்தான், தன்னை

உதறிக் கொண்டான். மின்னல்கள் வெட்டத் தொடங்கின; இடி முழங்கியது.

தீர்க்கதரிசி ஆவிக்குள்ளானான். அவன் சொன்னான், "என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல் முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைத் தரிசிப்பேன்; அவரை நானே பார்ப்பேன், அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்.

உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம். கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார். கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக." நாம் எதைப் பற்றிச் சோர்வடைந்திருக்கிறோம்?

"கடைசி நாளில் நான் அவரைப் பார்ப்பேன்," என்று சொன்னான், இருந்தும் அவன் கொப்பளங்களால் நிறைந்திருந்தான். "ஆனாலும் என் மாம்சத்தில் நான் அவரைத்

தரிசிப்பேன்." ஆமென். ஓ, ஆச்சரியம். அவனைப் பாருங்கள்.

27. பிறகு யோபு... நாம் அவசரப்பட வேண்டும். யோபு இறந்தபோது, அவன் தன்னை அடக்கம் செய்யவேண்டிய இடத்தைக் குறிப்பிட்டான். இப்போது, வரிகளுக்கு இடையில் கவனியுங்கள். அவன் பாலஸ்தீனத்தில் தன்னை அடக்கம் செய்யவேண்டிய இடத்தைக் குறிப்பிட்டான். ஆபிரகாம் வந்தார், சாராள் இறந்தபோது, அவருடைய காதலி... சாராள் மற்றும் ஆபிரகாம் இல்லாமல் பரலோகம் பரலோகமாகவே இருக்காது, இல்லையா? வேதாகமத்தின் அந்தக் காதலர்கள், எவ்வளவு உண்மையாகவும் அன்பாகவும் இருந்தார்கள் என்பதைப் பாருங்கள்...

கவனியுங்கள், சாராள் இறந்தபோது, ஆபிரகாம் யோபு அடக்கம் செய்யப்பட்ட கல்லறைக்கு அருகில் ஒரு நிலத்தை வாங்கினார். ஏன் என்று நான் ஆச்சரியப்படுகிறேன். அவர்கள், "ஓ, நாங்கள் அதை உங்களுக்குத் தருகிறோம்" என்று சொன்னார்கள். அவர் சொன்னார், "இல்லை.

நான் உங்களுக்கு இவ்வளவு சேக்கல் வெள்ளியைக் கொடுப்பேன். நான் இதை என்னுடைய அடக்கத்திற்காக வாங்கினேன் என்பதை நீங்கள் அறியும்படி இன்று இங்கே ஒரு சாட்சியை வைக்கப் போகிறேன்." ஏன் என்று நான் ஆச்சரியப்படுகிறேன்? அவர் ஒரு தீர்க்கதரிசி. அவர் சாராளை அடக்கம் செய்தார். பின்னர் ஆபிரகாம் இறந்தபோது, அவர் சாராளுடன் அடக்கம் செய்யப்பட்டார். அது சரியா? ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றார். ஈசாக்கு இறந்தபோது, அவர் கொண்டுவரப்பட்டு ஆபிரகாமுடன் அடக்கம் செய்யப்பட்டார். அது சரியா? ஈசாக்கு யாக்கோபைப் பெற்றார், யாக்கோபு எகிப்தில் இறந்தார்.

28. ஆனால் அவர் இறப்பதற்கு முன், ஒரு தீர்க்கதரிசியாக இருந்தபடியாலும், தன் மகன் ஒரு தீர்க்கதரிசி என்பதை அறிந்திருந்த படியாலும்... கர்த்தருடைய தூதன் ஒரு இரவு அவருடைய இடுப்பைத் தொட்டார். ஆற்றின் ஒரு கரையில் அவர் ஒரு பெரிய பலம் வாய்ந்த, வலிமையான, ஓடுகிற உலக மனிதராக இருந்தார். ஆற்றின் மறுபுறத்தில் அவர் நொண்டுகிற இளவரசனாக இருந்தார். நான்

நொண்டுகிற இளவரசனாக இருக்கவே விரும்புவேன், நீங்கள் விரும்பமாட்டீர்களா? தேவன் அவருடைய இடுப்பைத் தொட்டார்; சதை எலும்போடு ஒட்டிக்கொண்டது. அவர் நடக்கும்போது தனது வாழ்நாள் முழுவதும் நொண்டினார். அவர், "யோசேப்பே, நான் இறப்பதற்கு முன், உன் கையை எடுத்து இந்த நொண்டுகிற என் இடுப்பின் மேல் வை. என் எலும்புகளை இங்கே எகிப்தில் அடக்கம் பண்ணமாட்டேன் என்று நம் பிதாக்களின் தேவன் பேரில் ஆணையிடு" என்றார். ஏன் என்று நான் ஆச்சரியப்படுகிறேன்? அது வேதத்தில் எழுதப்படவில்லை; அது வரிகளுக்கு இடையில் உள்ளது. சரி.

யோசேப்பு அப்படியே செய்தார். அவர் இறந்தபோது, அவர் அவரை மேலே கொண்டு சென்று பாலஸ்தீனத்தில் அவருடைய தகப்பனார் ஈசாக்கு மற்றும் ஆபிரகாமுடன் அடக்கம் செய்தார். யோசேப்பு இறந்தபோது, "என் எலும்புகளை எகிப்தில் அடக்கம் பண்ணாதீர்கள்" என்று சொன்னார். ஏன் என்று ஆச்சரியப் படுகிறீர்களா? "ஆனால் நீங்கள் வெளியே போகும் போது, என் எலும்புகளைப்

பாலஸ்தீனத்தில், அங்கே என் தகப்பனார் இருக்கும் இடத்தில் அடக்கம் பண்ணுங்கள்." ஏன் என்று ஆச்சரியப்படுகிறீர்களா?

29. அவர்கள் தீர்க்கதரிசிகள். அவர்கள் காரியங்களுக்கு அப்பால் பார்த்தார்கள். கடைசி நாளில் மீட்பர் பூமியின் மேல் நிற்பார் என்று யோபு சொன்னதை அவர்கள் அறிந்திருந்தார்கள். அவர்கள் வரப்போகும் மேசியாவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

எகிப்தில் எந்த உயிர்த்தெழுதலும் நடக்கப் போவதில்லை என்று அவர்களுக்குத் தெரியும். உயிர்த்தெழுதல் பாலஸ்தீனத்தில் நடக்கப் போகிறது. மத்தேயு சுவிசேஷம் 27-வது அதிகாரத்தில், இயேசு கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தபோது, பூமியின் புழுதியில் நித்திரை செய்த அநேக பரிசுத்தவான்கள் அவருடன் எழுந்திருந்து, கல்லறையை விட்டு வெளியே வந்து, நகரத்திற்குள் பிரவேசித்து அநேகருக்குக் காணப்பட்டார்கள் என்று வேதாகமம் நமக்குச் சொல்கிறது: ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோபு. ஏன், என்னால் பார்க்க முடிகிறது... அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, அவர்கள் தேசத்தில்

காணப்படுவதையும், பேசுவதையும், அறிந்திருப்பதையும், அவர்கள் உள்ளே சென்றார்கள். அதனால்தான் இன்று நண்பர்களே, நானும் ஒரு ஹோலி-ரோலர் (holy-roller - புரளுகிறவர்கள்) என்று அழைக்கப்படுகிறேன். அது சரி. நான் மகிழ்ச்சியடைகிறேன். அதை ஒரு பெரிய பாக்கியமாகக் கருதுகிறேன்.

நீங்கள் என்னை என்னவென்று அழைத்தாலும் எனக்குக் கவலையில்லை; என்னை இயேசு கிறிஸ்துவுக்குள் அடக்கம் பண்ணுங்கள். ஏனென்றால் கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்களைத் தேவன் உயிர்த்தெழுதலில் தம்முடனேகூடக் கொண்டு வருவார். நான் அதைச் செமினரி இறையியலின் மூலம் பார்க்கவில்லை; உயிர்த்தெழுதலைக் காண தேவனுடைய ஆவியின் மூலம் பார்க்கிறேன். கிறிஸ்து இயேசுவுக்குள் இருப்பவர்களை மட்டுமே தேவன் தம்முடனேகூடக் கொண்டு வருவார். நாம் எப்படிக் கிறிஸ்து இயேசுவுக்குள் வருகிறோம்? சபையில் சேருவதாலோ, கை குலுக்குவதாலோ, கடிதம் வைத்திருப்பதாலோ அல்ல, "நாம் யூதரானாலும், கிரேக்கரானாலும், அடிமைகளானாலும், சுயாதீனரானாலும்,

எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, அந்தச் சரீரத்தின் அவயவங்களானோம் (1 கொரிந்தியர் 12)." ஆமென். எவ்வளவு அற்புதம்.

30. இதோ அவர் இருக்கிறார். அவரைப் பாருங்கள். வருடங்கள் கடந்தன, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோபு. பின்னர் மோசே, இஸ்ரவேல் புத்திரர் எகிப்தை விட்டு வெளியேறியபோது, மோசே யோசேப்பின் சரீரத்தை எடுத்துச் சென்றார். எகிப்தியத் துன்புறுத்துபவர்களால் மிகவும் வேதனைப் படுத்தப்பட்ட அந்த ஏழை முதிர்ந்த எபிரேயர்களின் அடிக்கப்பட்ட முதுகுகளை நினைத்துப் பாருங்கள். ஆனால் ஒவ்வொரு முறையும் அவர்கள் அந்தச் சிறிய ஈயப் பெட்டியைப் பார்த்து, யோசேப்பின் எலும்புகளைக் காணும்போது, "ஒரு மகிமையான நாளில் நாம் இங்கிருந்து வெளியே போகப்போகிறோம். ஏனென்றால், அந்த எலும்புகள் அழிவதற்கு முன்பே, நாம் பாலஸ்தீனத்திற்குச் செல்வோம், நாம் வீட்டிற்குச் செல்வோம் என்று தீர்க்கதரிசி நமக்கு வாக்குறுதி

அளித்திருக்கிறார்" என்று சொல்வார்கள். அங்கே யோசேப்பு இயேசுவுக்கு எவ்வளவு சரியான நிழலாட்டமாக இருந்தார்.

31. சில காலத்திற்கு முன்பு, பில்லியும் நானும் அவனுடைய அம்மாவின் கல்லறைக்குச் சென்று கொண்டிருந்தோம். அவனுக்குப் பதினெட்டு மாதக் குழந்தையாக இருந்தபோதே அவள் இறந்துவிட்டாள். ஈஸ்டர் காலையில் கல்லறையின் மீது ஒரு சிறிய பூவை வைத்துக் கொண்டிருந்தோம். அந்தச் சிறுவன் அழுது கொண்டிருந்தான். நான் அவனை அணைத்துக்கொண்டு, "அழாதே, கண்ணே" என்றேன். நான் சொன்னேன், "இங்கே கீழே, அம்மா இல்லை. உன் தங்கச்சியும் இல்லை. ஆனால் அவர்களின் சரீரம், அவர்களின் எலும்புகள் அங்கே கிடக்கின்றன. ஆனால் கடலுக்கு அப்பால் ஒரு காலி கல்லறை இருக்கிறது. கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்த அவருக்குள்—கல்லறைக்கு மரணமோ கொடுக்குகளோ தெரியாது, அவர்கள் அவருக்குள் இருந்தார்கள், ஒரு மகிமையான நாளில் நாம் இங்கிருந்து வெளியே வந்து,

வீட்டிற்குச் செல்லப் போகிறோம்," சரியான நிழலாட்டம்.

32. கவனியுங்கள். தேவனுடைய வார்த்தை... நானூறு ஆண்டுகள் அங்கே இருந்த பிறகு, தேவனுடைய வார்த்தை நிறைவேறும் காலம்... அவர் தனது வார்த்தையைக் காப்பாற்றுவார். வாக்குத்தத்தத்தின் காலம் நெருங்கியபோது, யோசேப்பை அறியாத ஒரு பார்வோன் எழும்பினான், அவன் இஸ்ரவேல் புத்திரரைத் துன்புறுத்தத் தொடங்கினான். அழைக்கப்பட்ட மனிதனை அழைப்பதற்காகத் தேவன் ஒரு அக்கினி ஸ்தம்பத்தில் இறங்கி வந்தார், அவன் அவரிடமிருந்து ஓடினான். அந்த அக்கினி ஸ்தம்பம், உடன்படிக்கையின் தூதனாக இருந்தது. அது நம் அனைவருக்கும் தெரியும். அது கிறிஸ்துவாக இருந்த லோகோஸ் (Logos) என்பதை எந்த வேதாகம வாசகரும் அறிவார்கள். "எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று மோசே எண்ணி, சிங்காசனத்தில் ஒரு காலை வைத்திருந்தபோது எகிப்தை விட்டார்" என்று வேதாகமம் கூறுகிறது. ஆனால் அவர்... "அநித்தியமான

பாவச் சந்தோஷங்களை அநுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பப்படுவதைத் தெரிந்துகொண்டார்."

33. கவனியுங்கள். அனைத்து பெரிய மக்களுக்கும், பெரிய மனிதர்களுக்கும் மற்றும் ஒவ்வொரு தனிநபருக்கும் ஒரு தீர்மானம் எடுக்கும் நேரம் உள்ளது. நீங்கள் ஆம் அல்லது இல்லை என்று சொல்ல வேண்டும். அது இன்றிரவு இங்கே உள்ள அநேகருக்கும் இருக்கலாம். "கிறிஸ்துவை என் பரிகாரியாக ஏற்றுக்கொள்வேன்" அல்லது "ஏற்றுக்கொள்ள மாட்டேன்" என்று நீங்கள் சொல்ல வேண்டும். பாருங்கள்?

கவனியுங்கள். நாம் விரைவாகச் செல்வோம், ஏனென்றால் சுமார் பன்னிரண்டு நிமிடங்கள் உள்ளன. இப்போது யோசித்துப் பாருங்கள். வாக்குத்தத்தத்தின் காலம் நெருங்கியது, எரியும் புதரில் ஒரு அக்கினி ஸ்தம்பத்தின் மூலம் தேவன் மோசேயை அழைத்தார். பின்னர் தேவன் அவருக்குக் கட்டளையிட்டார்.

இப்போது, நான்... "இதோ, வழியில் உன்னைக் காக்கவும் நான் ஆயத்தம்பண்ணின ஸ்தானத்துக்கு உன்னைக் கொண்டுபோய்ச் சேர்க்கவும், ஒரு தூதனை உனக்கு முன்பாக அனுப்புகிறேன்." அதை அவர் அவர்களுக்குக் கொடுக்கிறார். "அவர் சமுகத்தில் எச்சரிக்கையாயிருந்து, அவர் வாக்குக்குச் செவிகொடு; அவரைக் கோபப்படுத்தாதே; உங்கள் மீறுதல்களை அவர் மன்னிக்கமாட்டார்; என் நாமம் அவருக்குள் இருக்கிறது. நீ அவர் வாக்குக்கு உண்மையாய்ச் செவிகொடுத்து, நான் சொல்வதையெல்லாம் செய்தால், நான் உன் விரோதிகளுக்கு விரோ-ியாக இருப்பேன்."

கவனியுங்கள். அவர் சொன்னார், "நான் இப்போது அவரை அனுப்பப் போகிறேன், நான் ஏற்கனவே உங்களுக்குக் கொடுத்தி ருக்கிறேன்..." இதோ, இதைப் பெற்றுக் கொள்ளுங்கள், "நான் உங்களுக்கு பாலஸ்தீனத்தைக் கொடுத்துள்ளேன். அது இப்போது உங்களுடையது." இப்போது, அது ஏவியர், எபூசியர், பெரிசியர், எமோரியர் ஆகியோரால் வேலியடைக்கப்பட்டிருக்கிறது. அது முழுவதும் வேலியடைக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் நான் அதை உங்களுக்குக் கொடுத்துள்ளேன். அது உங்களுடையது."

34. இப்போது, ஒரு கணம் அதை உடைத்துப் பார்ப்போம். அந்தத் தேசம் அவனுக்குச் சொந்தமானது. இப்போது, தேவன், "நான் அங்கே போய் தேசத்தைக் காலி செய்துவிட்டு, உங்களை அதில் வைப்பேன்" என்று சொல்லவில்லை. அவர் சொன்னார், "நான் அதை உங்களுக்குக் கொடுத்துவிட்டேன்; இப்போது நீங்கள் போய் அவர்களுடன் சண்டையிடுங்கள்." அங்கே இருக்கிறீர்கள்.

இன்றிரவு தேவன் உங்களுக்குச் சுகத்தைக் கொடுத்திருக்கிறார், அம்மையே, உங்களுக்கு, உங்கள் ஒவ்வொருவருக்கும். அவர் உங்களுக்குச் சுகத்தைக் கொடுத்திருக்கிறார். அது உங்கள் உடைமை. அது அவிசுவாசம் என்ற எமோரியர்களாலும், கானானியர்களாலும், மற்ற எல்லாவற்றாலும் சூழப்பட்டிருக்கிறது. ஆனால் உள்ளே செல்லுங்கள், அதை எடுத்துக்கொள்ளுங்கள், அது உங்களுடையது. அது உங்களுக்குச் சொந்தமானது. அது சரி. "நான் அரசாள வேண்டுமானால் நான் போராட வேண்டும்; ஆண்டவரே, என் தைரியத்தை

அதிகரிக்கும்." இது ஒரு சுற்றுலா மைதானம் அல்ல; இது ஒரு போர்க்களம் (பாருங்கள்?), "ஆண்டவரே, நீர் வந்து அதை எனக்குள் திணித்துவிடும், அப்போது நான் அதைச் செய்வேன்" என்று நாம் பின்னால் சாய்ந்து சொல்லும் இடமல்ல. இல்லை, இல்லை. நீங்கள் அப்படிச் செய்வதில்லை. தேவன் ஒருபோதும் அப்படிச் செய்ததில்லை. அவருக்கு ஒரு அடிப்படை இருக்கிறது...

35. நேற்று இரவு நான் பேசியது போல், மின்சார விதி, நீர் விதி, புவிஈர்ப்பு விதி, எல்லாவற்றையும் போல, நீங்கள் அதற்கேற்ப செயல்பட வேண்டும். இப்போது, அவர் சொன்னார், "அங்கே தேசம் இருக்கிறது." இருந்தும் இஸ்ரவேலர்களில் சிலர் அதைப் பார்த்தபோது, "ஏன், நம்மால் அதை எடுத்துக் கொள்ள முடியாது" என்று சொன்னார்கள். உளவாளிகள் திரும்பி வந்தபோது, "ஏன், அந்தப் பெரிய மனிதர்களுக்கு முன்னால் நாம் வெட்டுக்கிளிகளைப் போல இருக்கிறோம்" என்றார்கள்.

36. ஆனால் யோசுவாவும் காலேபும் இருந்தார்கள். தேவன் என்ன சொன்னார்

என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். அவர்கள் சொன்னார்கள், "நாம் அதை எடுத்துக்கொள்ள முடியும். அது நம்முடையது."

ஏன், எரிகோ மிகவும் பெரியதாக இருந்தது, அதைச் சுற்றி இரண்டு தேர்களை ஓட்டலாம், ஒரு குதிரை பந்தயம். "நமது சிறிய ஈட்டிகள் மற்றும் பிறவற்றைக் கொண்டு நாம் எப்படி உள்ளே செல்ல முடியும்? வாசல்கள் அடைக்கப்பட்டிருக்கின்றன." உள்ளே பெரிய மனிதர்கள், ராட்சதர்கள் போலத் தெரிந்தார்கள், கானானியர்கள், அநேகமாக காமின் சந்ததியினர். "நாம் எப்படி உள்ளே சென்று அதை எடுத்துக்கொள்ள முடியும்?"

பாருங்கள், அவர்கள் இயற்கையான பகுதியைப் பார்த்தார்கள். இந்தப் பெண் எப்படி நடக்க முடியும்? அந்த நபர் எப்படி? ஒரு இதய நோயினால் அடுத்த சில நாட்களில் சாகப்போகும்... நிலையில் இருக்கும் இந்த மனிதர் எப்படி இப்போதே சுகமடைய முடியும்? அது நியாயமற்றது. உங்களால் அதை நியாயப்படுத்த முடியாது. காரணங்களால் தேவன் அறியப்படுவதில்லை.

37. எந்த மனிதனும் இதைப் புரிந்துகொள்வதில்லை. நீங்கள் விசுவாசத்தினால் அதை ஏற்றுக்கொண்டு, "அது அப்படியே இருக்கிறது" என்று சொல்ல வேண்டும். அது அறிவியலுக்கு எதிரானது. அது அறிவுக்கு எதிரானது. இந்த உலகின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாய் இருக்கிறது. ஒரு கன்னிப்பெண் ஒரு குழந்தையைப் பெற்றெ டுப்பது அனைத்து அறிவியல் ஆராய்ச்சி களுக்கும் எதிரானது, ஆனால் அவள் பெற்றெடுத்தாள். உலகம் எங்கிருந்து வந்தது? தேவன் வெறுமனே பேசி, "உண்டாகக்கடவது" என்றார், அது உண்டாயிற்று.

இப்போது, அவர் உங்களுக்கு இந்த வாக்குறுதியைக் கொடுத்துள்ளார். அது உங்களுடையது. பத்தொன்பது நூற்றாண் டுகளுக்கு முன்பு கல்வாரியில் இயேசு இறந்தபோதே உங்கள் ஒவ்வொருவருக்கும் சுகம் கிடைத்தது. அதில் நிறைய முட்செடிகள் வளர்ந்திருக்கின்றன என்று எனக்குத் தெரியும். அங்கே நிறைய கானானியர்கள் நின்று கொண்டு, "அற்புதங்களின் நாட்கள் கடந்துவிட்டன" என்று சொல்கிறார்கள். நிறைய

பெரிசியர்கள், "அந்த ஹோலி-ரோலர்களை (holy-rollers) நான் நம்புவதில்லை" என்று சொல்கிறார்கள்.

38. ஆனால் உள்ளே சென்று அதை எடுத்துக்கொள்ளுங்கள். அது உங்களுடையது. தேவன் அதை உங்களுக்குக் கொடுத்தார். அது ஒரு வாக்குறுதி. போங்கள், எப்படியும் அதை எடுத்துக்கொள்ளுங்கள். தேவன் அப்படிச் சொன்னால், கானானியர்களைப் பற்றி உங்களுக்கு என்ன கவலை? அற்புதங்களின் நாட்கள் கடந்துவிட்டன என்று சொல்லும் அந்த நீண்ட முகமுடைய மக்களுக்கு, அது அவர்களுக்குத்தான்.

ஆனால் விசுவாசிக்கு அது அப்படி இல்லை. ஒரு நபர் சொன்னார், "சகோதரர் பிரான்ஹாம், நான் அதை நம்பவில்லை." நான் சொன்னேன், "அது உங்களுக்காக இல்லை. அது விசுவாசிகள் மட்டுமே." அவ்வளவுதான். அது அவிசுவாசிகளுக்கு அல்ல.

இப்போது, அவர் சொன்னார், "போய் அதை எடுத்துக்கொள்ளுங்கள்." கவனியுங்கள். அவர் சொன்னார், "நான் என் பயங்கரத்தை

உனக்கு முன்பாக அனுப்புவேன், என் தூதன். அவர் வழியை ஆயத்தம் பண்ணுவார்." நீங்கள் கவனித்தால், அவர்கள் அங்கே சென்றபோது, ஒருவர் பொருள்சார்ந்த காரியங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். மற்றவர் ஆவிக்குரிய காரியத்தை, தேவனுடைய வாக்குறுதியைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

வெகு காலத்திற்கு முன்பு அல்ல, ஓ, ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளுக்கு முன்பு, கருப்பு டிப்தீரியாவால் ஒரு பையன் இறந்து கொண்டிருந்த மருத்துவமனைக்கு நான் அழைக்கப்பட்டேன். டாக்டர் என்னை உள்ளே விடமாட்டார், என் பையன், என் சிறுமி நிமித்தமாக.

அவர் சொன்னார், "பிரசங்கியே, நீங்கள் உள்ளே செல்ல முடியாது." அந்த மனிதர் கத்தோலிக்கர் என்பதை நான் சிறிது நேரம் கழித்து அறிந்தேன். அவர் சொன்னார், "நீங்கள் உள்ளே செல்ல முடியாது." அவர் சொன்னார், "உங்களுக்குச் சொந்தக் குழந்தைகள் இருக்கிறார்கள்." அந்த மனிதர் நேர்மையாக இருக்க முயன்றார்.

39. அவர் சொன்னார், "பையன் சாகிறான். அவனுக்காக நீங்கள் செய்யக்கூடியது எதுவுமில்லை." சொன்னார், "அவன் இப்போது இரண்டு நாட்களாக நினைவில்லாமல் இருக்கிறான். கார்டியோகிராம் (cardiogram), அது எதுவானாலும், எலக்ட்ரிக் கார்டியோகிராம் அது கிட்டத்தட்ட பூஜ்ஜியத்திற்குக் கீழே சென்றுவிட்டதாகக் காட்டியது." மேலும் சொன்னார், "அது ஒருபோதும் திரும்பி வராது. பையன் சாகிறான்."

வயதான தகப்பனும் தாயும் அங்கே நின்று, "எப்படியும் அவர் செல்ல வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்" என்று சொன்னார்கள். சரி, நான் சொன்னேன், "பாருங்கள் ஐயா, ஒரு பாதிரியார் இங்கே நின்று, அந்தப் பையனுக்குச் சபையின் இறுதிச் சடங்குகளைச் செய்ய விரும்பினால், நீங்கள் அவரைப் போக விடுவீர்களா?"

அவர் சொன்னார், "நிச்சயமாக, ஆனால் பாதிரியார் உங்களைப் போலக் குழந்தைகளைக் கொண்ட திருமணமான மனிதர் அல்ல." நான் சொன்னேன், "நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்."

சரி, அவர் என்னை உள்ளே அழைத்துச் சென்று, கு க்ளக்ஸ் கிளான் (Ku Klux Klan) போல என்னை உடுத்தி, என் மேல் எல்லாவற்றையும் போட்டு, அது போலச் செய்து, என் கைகளைக் கழுவி, பையனுக்கு முன்பாக என்னை அனுப்பினார். அவன் நினைவில்லாமல் இருந்தான். தாய் ஒரு பக்கமும், தந்தை மறுபக்கமும் தலைவணங்கினார்கள். அந்தச் சிறிய செவிலியர் ஓரத்தில் நின்றார்.

40. நான் வேறு ஒன்றும் செய்யவில்லை, அந்தப் பையனை வாழ விடுமாறு தேவனிடம் கேட்டேன். அந்தச் சிறிய பையனை அப்படி எடுத்துக்கொள்வது தேவனுடைய சித்தம் என்று நான் நம்பவில்லை. அவனுக்கு சுமார் பதினைந்து வயது இருக்கும். அவன் மேல் கைகளை வைத்து, "தேவனே, இது உமது வார்த்தை, நான் உம்மை விசுவாசிக்கிறேன். நீர் சொன்னதன் நினைவாக நான் என் கைகளை அவன் மேல் வைக்கிறேன்" என்றேன். எழுந்து, "ஆமென்" என்றேன்.

தகப்பன் மறுபக்கம் ஓடிவந்து தாயைப் பிடித்துக்கொண்டு அவளை முத்தமிட்டு,

"அம்மா, இது அற்புதமாக இல்லையா?" என்றார். பையன் அங்கே இறந்து கொண்டிருந்தான்...

"சரி," அவர் சொன்னார், அம்மா, சொன்னார், "ஓ, இது மிகவும் அற்புதமானது அன்பே, கர்த்தர் நம் பையனைச் சுகமாக்கியதை நினைப்பது," அவன் அங்கே இறந்து கொண்டிருந்தான்.

41. அந்தச் சிறிய செவிலியர் சொன்னார், "ஐயா, டாக்டர் சொன்னதை நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டீர்கள் என்று நான் நம்புகிறேன்." சொன்னார், "இப்போது, விசுவாசம் இருப்பது நல்லது, ஆனால் உங்கள் பையன் அடுத்த சில மணிநேரங்களில் பிணமாக இருக்கும்போது, நீங்கள் எப்படி அப்படிச் செயல்பட முடியும், அவ்வளவு மகிழ்ச்சியாக இருக்க முடியும்?" சொன்னார், "அந்த கார்டியோகிராம் கீழே இறங்கும்போது (அந்த எலக்ட்ரிக் எதுவானாலும்), அது மீண்டும் மேலே வந்ததாக உலக வரலாற்றிலேயே இதுவரை அறியப்படவில்லை." சொன்னார், "பையன் சாகிறான்."

அந்த வயதான பரிசுத்தவான் தன் கண்களிலிருந்து கண்ணீரைத் துடைத்துவிட்டு, அந்தச் சிறிய செவிலியரின் தோளில் தன் கைகளை வைத்து, "என் அன்பான குழந்தையே," அவர் சொன்னார், "நீ அந்த எலக்ட்ரிக் கார்டியோகிராமைப் பார்க்கிறாய், ஏனென்றால் பார்ப்பதற்கு உனக்குத் தெரிந்தது அவ்வளவுதான். ஆனால் நான் தேவனால் அருளப்பட்ட ஒரு தெய்வீக வாக்குறுதியை நோக்கிப் பார்க்கிறேன். என் பையன் உயிரோடிருக்கிறான்." அல்லேலூயா.

42. அந்தப் பையன் இப்போது திருமணமாகி ஒரு குழந்தையைப் பெற்றிருக்கிறான். சரி. தேவனுடைய வாக்குறுதியைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது. நீங்கள் உள்ளே சென்று அதைச் சுதந்தரித்துக்கொண்டால் அவர் அதை உங்களுக்குக் கொடுப்பார். அது உங்களு டையது; போய் எடுத்துக்கொள்ளுங்கள்.

அவர்கள், "சரி, எங்களால் முடியாது" என்று சொன்னார்கள். ஆனால் யோசுவாவும் காலேபும் தேவன் என்ன சொன்னார் என்பதை அறிந்திருந்தார்கள், எனவே அவர்கள் அதை

நம்பினார்கள். இப்போது, கவனியுங்கள், 29-வது வசனத்தில். அவர் சொன்னார், "வெளியின் மிருகங்கள் உனக்குப் பெருகி, உனக்கு விரோதமாய் வராதபடிக்கு, நான் அவர்களை ஒரே வருஷத்தில் உனக்கு முன்பாகத் துரத்தி விடமாட்டேன். நீ தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளத்தக்கதாய், அவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாய் உனக்கு முன்பாகத் துரத்தி விடுவேன்." அங்கே இருக்கிறீர்கள்.

நீங்கள் எப்படி உணர்ந்தாலும் பரவாயில்லை, இப்போதே அதை ஏற்றுக் கொள்ளுங்கள். ஜெபம் தொடங்கும் வரை காத்திருக்க வேண்டாம், இப்போதே ஏற்றுக்கொள்ளுங்கள். உங்கள் காலை அசைக்க முடியாவிட்டாலும், உங்கள் கால்விரலை அசைக்க முடியும் என்று கண்டால், இப்போதே உங்களுக்குத் தேவையானது அவ்வளவுதான். அது சரி. "கொஞ்சம் கொஞ்சமாக, நான் ஒவ்வொரு எதிரியையும் துரத்துவேன்."

ஒவ்வொரு அவிசுவாசம், ஒவ்வொரு... கூட்டம் முடிவதற்குள், நீங்கள் சத்தமிட்டுக் கொண்டு தளத்தில் ஓடிக் கொண்டிருக்கலாம். "நீங்கள் அதை ஏற்றுக் கொள்ள முடிந்தவுடன்,

நான் அதைத் துரத்துவேன். வழியில் உன்னைக் காக்க என் தூதனை உனக்கு முன்பாக அனுப்புவேன்." அந்தப் பெரிய...

43. ஓ, நான் உங்களுக்குச் சொல்கிறேன், காரியம் என்னவென்றால்... கிறிஸ்தவர்கள் நமக்கு இருக்கும் சிலாக்கியத்தை உணருவதில்லை. நாம், ஒரு பெரிய கடை வீதிக்குச் சென்று, ஒரு பெரிய பல்பொருள் அங்காடிக்குள் செல்வதைப் போல இருக்கிறோம். நீங்கள் பல்பொருள் அங்காடிக்குள் செல்கிறீர்கள், இங்கே பார்க்கிறீர்கள், இங்கே சில இருக்கிறது, உங்களுக்கு அது பிடித்திருக்கிறது.

இப்போது, நான் ஒரு பல்பொருள் அங்காடிக்குள் செல்லும்போது, கொஞ்சம் சுற்றிப் பார்க்க விரும்புகிறேன், நீங்களும் அப்படித் தானே, குறிப்பாக அது என்னுடையதாக இருந்தால்? மேலே உயரத்தில் ஏதோ ஒன்றை நான் கண்டால், நான் ஒரு ஏணியை எடுத்துக்கொண்டு, மேலே ஏறி, அதைப் பார்த்து, ஆராய்ந்து, அது எப்படி இருக்கிறது என்று பார்ப்பேன்.

கிறிஸ்து இயேசுவுக்குள் அப்படித்தான் இருக்கிறது. ஒரே ஆவியினால், நாம் அனைவரும் தேவனுடைய பெரிய பல்பொருள் அங்காடியாகிய இயேசு கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோம், அங்கே நமக்குச் சமாதானம், சந்தோஷம், மகிழ்ச்சி, நீடியபொறுமை, தயவு, நற்குணம், சாந்தம், பரிசுத்த ஆவி, தேவனுடைய வல்லமைகள், அந்நிய பாஷைகளில் பேசுதல், பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல், தெய்வீக சுகம், மகிமை, ஆரவாரங்கள், ஞானம் ஆகியவை உள்ளன. அல்லேலூயா. இவையெல்லாம் நம்முடையவை, ஒவ்வொரு விசுவாசிக்கும்: உங்களுக்குச் சொந்தமானது.

44. "உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்குகிற கர்த்தர் நானே." எல்லாம் என்னுடையது. தெய்வீக சுகம் கொஞ்சம் உயரத்தில் இருப்பதாகத் தோன்றினால், அது என் பல்பொருள் அங்காடியில் இருக்கிறது, ஏனென்றால் அது இங்கேயே இருக்கிறது. இது நம்முடைய பல்பொருள் அங்காடி. ஆமென்.

நான் உள்ளே இருக்கும்போது, நான் மேலே ஏறி இதை எடுத்துக்கொள்வேன். அது என்னுடையது. கொஞ்சம் எட்ட வேண்டி யிருக்கலாம், கொஞ்சம் சிரமப்பட வேண்டி யிருக்கலாம், ஆனால் நான் அதைப் பெறுவேன். அது எனக்குச் சொந்தமானது. அதைப் பெற்றே தீருவது என்று நான் உறுதியாக இருக்கிறேன்.

இஸ்ரவேலர் அப்படித்தான் இருந்தார்கள். அந்தப் பெரிய மதில் சுவர்களுக்குள் அவர்கள் நேராகச் சென்றார்கள். சாட்சிகள்... தேவன் ஆற்றைப் பிளந்ததை யோசுவா கண்டார். மக்கள் ஆரவாரம் செய்தால், சுவர்கள் விழும் என்று நம்புவது அவருக்கு எளிதாக இருந்தது.

45. சரி, பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானத்தைப் பெற்ற மக்களாகிய நீங்கள், இயேசு கிறிஸ்து உயிரோடிருக்கிறார் மற்றும் அரசாளுகிறார் என்பதற்கான சாட்சியைப் பெற்றிருக்கிறீர்கள், தெய்வீக சுகத்தை நம்புவது உங்களுக்கு எளிதான காரியமாக இருக்க வேண்டும்.

யோசுவாவுக்குத் தெரியும், அவர்கள் ஆரவாரம் செய்யத் தொடங்கிய உடனேயே,

சுவர்கள் விழப்போகின்றன என்று. வெற்றி அவருடையது, ஏனென்றால் தேவன் அப்படிச் சொன்னார். அதுதான். சொன்னார்...

கர்த்தருடைய தூதன் அவர்களுக்கு முன்பாகச் சென்றார், இரவில் அக்கினி ஸ்தம்பமாகவும், பகலில் மேகமாகவும், உடன்படிக்கையின் தூதனாகிய கிறிஸ்து, நமக்குள் வாசம் பண்ண மாம்சமாவதற்கு முன்பே லோகோஸாக (Logos) இருந்தார். இப்போது, நான் உங்களிடம் ஒன்று கேட்க விரும்புகிறேன்.

அது பழைய ஏற்பாட்டின் அடையாளமாக இருந்தது. அவர்கள் அந்த அக்கினி ஸ்தம்பத்தைப் பின்பற்றினார்கள். அது எங்கே சென்றதோ, அங்கே அவர்களும் சென்றார்கள். அது நின்றபோது, அவர்களும் நின்றார்கள். அவர்கள் தங்கள் கூடாரங்களை அக்கினி ஸ்தம்பத்தின் கீழ், ஒரு அக்கினி ஸ்தம்பத்தின் கீழ் அமைத்தார்கள். பின்னர்...

46. அது இடிமுழக்க நெருப்பு என்று சொல்லவில்லை, அது ஒரு அக்கினி ஸ்தம்பம். அது நின்ற இடத்தில், அவர்கள் நின்றார்கள்.

ஆசாரியர்கள் அதைக் கவனித்தார்கள். அது நகரும் போதெல்லாம், அவர்கள் எக்காளங்களை முழங்கினார்கள். நடுராத்திரியாக இருந்தாலும், காலை மூன்று மணியாக இருந்தாலும், நண்பகல் பன்னிரண்டு மணியாக இருந்தாலும், அவர்கள் அனைவரும் மூட்டை கட்டிக்கொண்டு போனார்கள். அவர்கள் அக்கினி ஸ்தம்பத்தைப் பின்பற்றினார்கள். அப்படிச் செய்வதன் மூலம் அவர்கள் கர்த்தருடைய சித்தத்தில் இருந்தார்கள். எவ்வளவு அழகானது. புதிய ஏற்பாட்டில் அவர்கள் எப்போதாவது அந்த அக்கினி ஸ்தம்பத்தை இழந்தால்... அதாவது நம் காலத்தில்.

ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகால இருண்ட யுகங்களில், அவர்கள் அதைக் காணத் தவறினார்கள். ஆனால் ஒரு நாள் மார்ட்டின் லூத்தர் என்ற பெயருள்ள ஒரு நபர் இருந்தார். அவர் அக்கினி ஸ்தம்பத்தைக் கண்டார், அவர் முதல் சீர்திருத்தத்தில் சென்றார்.

47. ஆனால் உங்களுக்கு ஒன்று தெரியுமா? அவர் தனது சபையை மிகவும் இறுக்கமாக ஒழுங்கமைத்தார், அது லூத்தரன் சபையாக மட்டுமே இருக்கத் தொடங்கியது. நீங்கள்

லூத்தரனாக இருந்தீர்கள் அல்லது அதில் இல்லை. அப்படிப்பட்ட ஒன்றின் மேல் அக்கினி ஸ்தம்பம் தங்காது.

எனவே அது அகன்று சென்றது. லூத்தரால் அதைப் பின்பற்ற முடியவில்லை, ஏனென்றால் அவர் எல்லாம்... லூத்தர் இறந்து பல வருடங்கள் ஆகிவிட்டன, சபையின் ஊழியர்கள் அல்லது அப்போஸ்தலர்களின் மற்றொரு சுற்றும், மற்றொரு சுற்றும், மற்றொரு சுற்றும் வலுவிழந்து போனது, சீஷர்களைப் போலவே. அக்கினி ஸ்தம்பம் லூத்தரன் சபையை விட்டு விலகிச் சென்றது. லூத்தரால் போக முடியவில்லை, ஏனென்றால் அவர் தனது சடங்குகள் மற்றும் எல்லாவற்றையும் எழுதி வைத்திருந்தார்.

இங்கிலாந்தில் ஜான் வெஸ்லி என்ற பெயருள்ள ஒரு சிறிய நபர் இருந்தார், அவர் அதைக் கண்டார், அவர் சென்றார். அவர் ஒரு எழுப்புதலைக் கொண்டிருந்தார், அது இங்கிலாந்தையும், அமெரிக்காவையும், அந்த நாளில் ஆங்கிலம் அறியப்பட்ட உலகத்தையும் காப்பாற்றியது: வெஸ்லி எழுப்புதல்.

48. வெஸ்லி, ஜார்ஜ் ஒய்ட்ஃபீல்ட், ஓ, ஆஸ்பரி, அவர்களில் அநேகர், அவர்கள் அந்தப் பெரிய எழுப்புதலைக் கொண்டிருந்தார்கள். பின்னர் உங்களுக்குத் தெரிந்த முதல் விஷயம், அவர்கள் மிகவும் ஒழுங்கமைக்கப் பட்டுவிட்டார்கள், சில சுற்றுகளுக்குப் பிறகு அவர்கள் மிகவும் குளிராகவும் விறைப்பாகவும் மாறத் தொடங்கினார்கள். அது சரி. அக்கினி ஸ்தம்பம் அதன் மேல் தங்காது. எனவே அது அகன்று சென்றது.

பெந்தேகோஸ்தேக்காரர்கள் என்று அழைக் கப்பட்ட ஒரு கூட்டத்தார் அதைக் கண்டார்கள். அவர்கள் அதற்குப் பின்னால் சென்றார்கள். அவர்கள் அதன் கீழ் ஒரு சபையைக் கட்டினார்கள். ஆனால் சோகமான பகுதி உங்களுக்குத் தெரியும், பெந்தேகோஸ் தேக்காரர்கள் மிகவும் ஒழுங்கமைக்கப் பட்டிருக்கிறார்கள், அக்கினி ஸ்தம்பம் மீண்டும் வெளியேறிக் கொண்டிருக்கிறது, அவர்களால் போக முடியவில்லை. அது சரி. ஆனால் அக்கினி ஸ்தம்பம் எப்படியும் நகர்ந்து கொண்டிருக்கிறது. தேவன் அது நடக்கும் என்று சொன்னார். அது சரி.

இரவில் நெருப்பின் அடையாளத்தையும் பகலில் ஒரு மேகத்தையும் அவர்கள் கொண்டிருந்தார்கள், அது அவர்களை வழிநடத்தியது.

49. இப்போது, இன்றிரவு இங்கே தேவனுடைய இல்லத்தில், அதே அக்கினி ஸ்தம்பம் இங்கே இருக்கிறது... ஏனென்றால் அது உடன்படிக்கையின் தூதனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. அவர் இறந்தபோது, அவர் மீண்டும் உயிர்த்தெழுந்தார், அவர் என்றென்றும் உயிரோடிருக்கிறார். தாம் செய்த காரியங்களை நாமும் செய்வோம் என்றும், அவைகளை விடப் பெரிய காரியங்களைச் செய்வோம் என்றும் அவர் வாக்குறுதி அளித்தார், ஏனென்றால் அவர் பிதாவினி டத்திற்குச் சென்றார். அது சரியா?

அவர் தன்னை ஒரு சுகமளிப்பவர் என்று ஒருபோதும் கூறிக்கொள்ளவில்லை. "பிதா செய்வதாக நான் எதைக் காண்கிறேனோ, அதையே நானும் செய்கிறேன்" என்று அவர் சொன்னார். அது சரியா? நேற்று இரவு நாம் அதைப் பார்த்தோம், படித்தோம்: யோவான் 5:19, "என்னால் தானாக ஒன்றும் செய்ய முடியாது..."

பெதஸ்தா குளத்தில் இருந்த அனைவரையும் அவர் சுகமாக்கவில்லை என்று அவர்கள் அநேகமாக அவரை விமர்சித்தபோது... அவர் படுக்கையில் இருந்த ஒரு மனிதனை மட்டுமே சுகமாக்கினார். அந்த மனிதன் எங்கே இருக்கிறான் என்று தேவன் அவருக்குக் காண்பித்தார்; அவர் சென்று தேவன் தன்னிடம் சொன்னதைச் செய்துவிட்டுப் போய்விட்டார். பாருங்கள்? அவர் சொன்னார், "என்னால் தானாக ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் பிதா செய்வதாக நான் எதைக் காண்கிறேனோ, அதையே நானும் செய்கிறேன். என் பிதா இதுவரைக்கும் கிரியை செய்கிறார், நானும் கிரியை செய்கிறேன்." சரி.

50. இப்போது, அது தேவனுடைய சித்தத்தைப் பின்பற்றி, பூமியில் வெளிப்படுத்தப்பட்ட அக்கினி ஸ்தம்பமாக இருந்தது. இப்போது, பத்தொன்பது நூற்றாண்டுகளுக்குப் பிறகு, நம் நடுவில் அதே அக்கினி ஸ்தம்பம் இருக்கிறது. நீங்கள் சிறிது நேரத்திற்கு முன்பு அதன் படத்தை வாங்கினீர்கள். மரியாதையுடன் சொல்கிறேன். அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டது...

இன்றிரவே நான் இறந்தால்... இப்போது, அந்த அக்கினி ஸ்தம்பத்திற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நான் ஒரு மனிதன் மட்டுமே. அந்த அக்கினி ஸ்தம்பம் சபையில் இருக்கிறது, என்னுடன் மட்டுமல்ல; அது உங்கள் ஒவ்வொருவருடனும் இருக்கிறது. அது நாம் அனைவரும்.

அது ஒரு தெய்வீக அத்தாட்சி மட்டுமே. கதை உங்களுக்குத் தெரியும். பாப்டிஸ்ட் போதகர் ஒருவர் தெய்வீக சுகத்தைப் பற்றி எனக்குச் சவால் விடுத்தார், அங்கே வந்து நான் ஒரு மத மாற்றத்தைத் தூண்டுகிறவன் (religious proselyte) தவிர வேறில்லை என்றும், நான் நகரத்திலிருந்து விரட்டப்பட வேண்டும் என்றும், அதைச் செய்ய வேண்டிய நபர் அவரே என்றும் சொன்னார். உங்களில் பலர் அநேகமாக அங்கே இருந்திருப்பீர்கள். ஹூஸ்டன் கூட்டத்தில் எத்தனை பேர் இருந்தீர்கள்? உங்கள் கைகளைப் பார்ப்போம். நிச்சயமாக, அவர்கள் சுற்றிலும் இருக்கிறார்கள்.

51. சரி, அவர்கள் செய்தித்தாளில் ஒரு பெரிய பகுதியை வெளியிட்டார்கள். சகோதரரே, நான் யாருடனும் சண்டையிட மாட்டேன்.

ஆனால் சகோதரர் பாஸ்வொர்த், "இதை நான் பார்த்துக்கொள்கிறேன்" என்றார். நான் அவரைக் கண்டபோது பழைய காலேபை நினைத்தேன், அந்த வயதான மனிதர் அங்கே நின்று கொண்டிருந்தார், எழுபது வயதுக்கு மேற்பட்டவர், கல்லறையிலிருந்து அல்லது செமினரியிலிருந்து இப்போதுதான் வெளியே வந்த ஒரு புதிய அறிஞருக்கு எதிராகத் தன் அறிவைச் சோதித்துப் பார்க்க; அதே விஷயம்.

எனவே அவர்... இந்த இளம் இறையியல் டாக்டருடன் அங்கே நின்று கொண்டிருந்தார், சகோதரர் பாஸ்வொர்த் சொன்னார், "பரவாயில்லை, சகோதரர் பிரான்ஹாம். நான் வாக்குவாதம் பண்ணமாட்டேன்." அன்று இரவு, அந்தப் பழைய பிதா அந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு முன்பாக எவ்வளவு அமைதியாக அமர்ந்திருந்தார் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும்.

அவர் சொன்னார், "சகோதரர் பெஸ்ட், நான் உங்களிடம் ஒரே ஒரு கேள்வி கேட்கிறேன். நீங்கள் எனக்கு ஆம் அல்லது இல்லை என்று பதில் சொன்னால். நாம்... அது அதைத் தீர்த்துவிடும்." சொன்னார், "யேகோவாவின்

மீட்பின் நாமங்கள் இயேசுவுக்குப் பயன்படுத்தப் பட்டதா, ஆம் அல்லது இல்லை?" அது முடித்துவிட்டது.

அவர் சொன்னார், "நான் எழுந்திருக்கும் போது அதற்குப் பதிலளிப்பேன்."

"இப்போது எனக்குப் பதிலளிக்குமாறு நான் உங்களைக் கேட்கிறேன், நீங்கள் எழுந்திருக்க வேண்டியதில்லை" என்றார். அது சரி. சரி, சொல்வதற்கு ஒன்றுமில்லை. அவர் சொன்னார், "சகோதரர் பெஸ்ட், உங்களால் அதற்குப் பதிலளிக்க முடியாததற்கு நான் வருந்துகிறேன். இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் என்று கூறும் புதிய ஏற்பாட்டில் உள்ள அறுநூறு கேள்விகள் என்னிடம் உள்ளன."

52. "அது என்னுடைய பலவீனமான ஒன்று" என்று சொன்னார். அது அவருடைய பலவீனமான ஒன்று என்பதை அவர் நிரூபித்தார். ஆனால் அவர் "இல்லை" என்று சொன்னால், அவர் யேகோவா ஈரே, கர்த்தர் ஆயத்தம் பண்ணும் பலி அல்ல, அவர் இயேசு கிறிஸ்து அல்ல.

அவர் யேகோவா ஈரேவாக இருந்தால், அவர் மற்ற மீட்பின் நாமங்களையும் பயன்படுத்தியிருக்க வேண்டும், அப்போது அவர் யேகோவா ராஃப்பா, சுகமளிப்பவர், நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். அது அதைத் தீர்த்துவிட்டது. எனவே அவ்வளவுதான்.

அன்று இரவு இந்த மிஸ்டர் பெஸ்ட் எழுந்து அங்கே நின்ற பிரசங்கியை அறைந்தபோது, பின்னர் அவர் சொன்னார், "அந்தத் தெய்வீக சுகமளிப்பவரை இங்கே கொண்டு வாருங்கள். அவர் அற்புதங்களைச் செய்வதை நான் பார்க்கிறேன், நான் நம்புவேன். நான் பார்க்கிறேன்." சகோதரர் பாஸ்வொர்த் அதற்காக அவரை வெட்கப்படுத்தினார்.

53. எனவே, நான் பால்கனி முப்பதில் இருப்பதை அவர் அறிந்திருந்தார். அவர் சொன்னார்... நான்... யாருக்கும் தெரியாது. ஏனென்றால் மனைவி அங்கே உட்கார்ந்திருந்தாள், சில போலீஸ்காரர்கள் என்று நினைக்கிறேன். என் சகோதரனும் அவர்களும் என்னை மேலே அழைத்துச் சென்றிருந்தார்கள். நான் அங்கே என் கோட்டை மேலே

இழுத்துவிட்டு உட்கார்ந்திருந்தேன். அவர்கள்... என் சகோதரன்...

சகோதரர் பாஸ்வொர்த் சொன்னார், "இப்போது, சகோதரர் பிரான்ஹாம் கூட்டத்தில் இருக்கிறார் என்று எனக்குத் தெரியும். அவர் கீழே வந்து கூட்டத்தைக் கலைக்க விரும்பினால், சரி. அவர் விரும்பவில்லை என்றால், சரி, அது அவருடைய விருப்பம்."

என் சகோதரர் ஹோவர்ட் சொன்னார், "நீ பேசாமல் உட்கார்."

நான் சொன்னேன், "சரி, நான் பேசாமல் தானே உட்கார்ந்திருக்கிறேன்?"

அப்போது ஏதோ ஒன்று "ஹூவ்" என்று செல்வதைக் கேட்டேன். இதோ அவர் இருந்தார். சரி. என்னால் சும்மா உட்கார முடியவில்லை. நான் எழுந்தேன்.

என் மனைவி அவரிடம், "வேண்டாம்" என்று சொன்னாள். பாருங்கள்?

54. மக்கள் அழ ஆரம்பித்தார்கள். அவர்கள்... உஷர்களின் பெரிய வரிசை, பல நூறு பேர் தங்கள் கைகளை ஒன்றாக

இணைத்தார்கள். நான் மேடைக்கு வந்தேன். நான் சொன்னேன், கூட்டத்தைக் கலைக்க, நான் சொன்னேன், "நான்—நான்... மிஸ்டர் பெஸ்ட், அவரைப் பற்றித் தவறாக நினைக்காதீர்கள். ஒரு அமெரிக்கராக இருப்பதற்கு அமெரிக்காவில் எனக்கு எவ்வளவு உரிமை இருக்கிறதோ, அதே அளவு உரிமை அவர் கொண்டிருப்பதற்கும் இருக்கிறது. அதை நம்புவதற்கு அவருக்கு வேதப்பூர்வமான உரிமை இருக்கிறது.

ஆனால் அதை நம்புவதற்கு, அல்லது நம்பாமல் இருப்பதற்கு, ஒரு அமெரிக்கராக அவருக்கு எவ்வளவு உரிமை இருக்கிறதோ, அதை நம்புவதற்கு எனக்கும் அவ்வளவு உரிமை இருக்கிறது. அதனால்தான் நாம் இப்போது கொரியாவில் சண்டையிடுகிறோம், மற்றும் பல," என்று சொன்னேன். [ஒலி நாடாவில் காலியிடம்]

நான் ஒரு தெய்வீக சுகமளிப்பவர் என்று ஒருபோதும் சொன்னதில்லை. நான் சொன்னேன், "இயேசு கிறிஸ்துவை முதல் முறை சந்தித்த அதே பழைய பிசாசு, 'நீ தேவனுடைய குமாரனானால், எனக்கு முன்னால் இங்கே ஒரு அற்புதத்தைச் செய், நீ அதைச்

செய்வதை நான் பார்க்கிறேன்' என்று சொன்னான்."

55. வெகு காலத்திற்கு முன்பு அல்ல, வானொலியில் ஒரு மனிதர் எனக்குச் சவால் விடுத்தார். தெய்வீக சுகத்தின் ஒரு சம்பவத்தை நிரூபிக்கும் எவருக்கும் ஆயிரம் டாலர் தருவதாகச் சொன்னார். சுமார் ஒரு மணி நேரத்திற்குப் பிறகு, மருத்துவர்கள் மற்றும் அறிக்கைகள் மற்றும் எல்லாவற்றோடும் சுமார் இருபது சம்பவங்கள் என் வாசலில் நின்றன. நான் சொன்னேன், "போய் அந்த ஆயிரம் டாலரை வசூலிப்போம்."

நான் அவர் வீட்டிற்குச் சென்றேன். அவர் சொன்னார், "நான் உங்களை எங்கள் தலைமையகமான டெக்சாஸ், அபிலீனுக்கு அழைத்துச் செல்கிறேன். அங்கே ஒரு சிறுமியை அழைத்துச் செல்வோம், அவளுடைய கையை வெட்டுவோம், நீங்கள் அதைச் சுகமாக்குங்கள்... நாங்கள் அதை நீட்டிப் பிடிப்போம், நீங்கள்... நாங்கள்... எங்கள் சகோதரர்கள் அனைவரும் உங்களுக்கு ஆயிரம் டாலர் கொடுப்போம்."

நான் சொன்னேன், "நீங்கள் மோசமான மனநலக் குறைபாட்டால் பாதிக்கப் பட்டிருக்கிறீர்கள், எந்த மனிதனும் அப்படிப்பட்ட காரியத்தைச் சிந்திப்பான்."

இப்போது, இயேசுவைச் சந்தித்து, "இப்போது, நீ தேவனுடைய குமாரனானால், இங்கே எனக்கு முன்னால் ஒரு அற்புதத்தைச் செய், நீ அதைச் செய்வதை நான் பார்க்கிறேன், நான் உன்னை நம்புவேன். இந்தக் கற்களை அப்பங்களாக மாற்று, நீ சாப்பிடு. இப்போது, நீ அதைச் செய்வதை நான் பார்க்கிறேன்" என்று சொன்ன அதே பழைய பிசாசு.

56. அவரைத் தேவாலயத்தின் உப்பரிகையில் கொண்டுபோய் நிறுத்தி, "இப்போது, நீ தேவனுடைய குமாரனானால், தாழக்குதியும். ஏனெனில், 'உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக் கொண்டுபோகும்படி, தம்முடைய தூதர்களுக்கு உன்னைக்குறித்துக் கட்டளை யிடுவார்' என்று வேதத்தில் எழுதியிருக்கிறது" என்றான். வேதவசனத்தை அவருக்கு மேற்கோள் காட்டினான்...

அதே பழைய பிசாசு சிலுவையில் இருந்த இயேசுவிடம், "இப்போது, நீ தேவனுடைய குமாரனானால், உன் கைகளை விடுவித்துக் கொண்டு கீழே வா, நாங்கள் உன்னை நம்புவோம்" என்று சொன்னான்.

அவருடைய முகத்தைச் சுற்றி ஒரு துணியைக் கட்டி, ஒரு கோலால் அவருடைய தலையில் அடித்தார்கள். "மக்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பது உமக்குத் தெரியும். நீர் ஒரு தீர்க்கதரிசி. உமக்கு எல்லாம் புரியும். உம்மை அடித்தது யார் என்று எங்களுக்குச் சொல்லும்" என்று சொன்னார்கள். அதே பழைய பிசாசு இன்னும் உயிரோடிருக்கிறான், அதே விஷயம்.

இந்த வழியில் ஒரு அற்புதம் செய்யப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள். தேவன் என்ன செய்கிறார் என்பதைச் சுற்றிலும் பார்க்கப் போதுமான புத்திசாலித்தனம் இல்லை, அல்லது தேவன் என்ன செய்கிறார் என்பதைப் பார்க்கச் சரியான ஆவிக்குரிய மனப்பான்மை இல்லை என்று நான் சொல்வேன்.

இப்போது, இயேசு சொன்னார், "அவர்களை விட்டுவிடுங்கள். குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால், இருவரும் குழியில் விழுவார்கள் அல்லவா?" எனவே அவர்களுடன் விளையாடாதீர்கள். நான் சகோதரர் பாஸ்வொர்த்திடம், "நீங்கள் அதைச் செய்திருக்கக் கூடாது" என்று சொன்னேன். மேலும், "நான் ஒருபோதும் தெய்வீக சுகமளிப்பவர் என்று சொல்லிக்கொண்டதில்லை" என்று சொன்னேன்.

அப்போது எனது இலக்கியம் பதினேழு வெவ்வேறு மொழிகளில் வெளியிடப்பட்டது. நான் சொன்னேன், "தெய்வீக சுகமளிப்பவராக இருப்பதைப் பற்றி நான் ஒருபோதும் ஒரு முறை கூட எந்த அறிக்கையும் வெளியிடவில்லை. தேவனே சுகமளிப்பவர் என்று நான் எப்போதும் சொல்லி வருகிறேன். நான் மக்களை இயேசு கிறிஸ்துவிடம் மட்டுமே சுட்டிக்காட்டுகிறேன்."

57. நான் சொன்னேன், "இப்போது, தரிசனத்தைப் பொறுத்தவரை, அது உண்மை. அது ஒரு தெய்வீக வரம்." நான் சொன்னேன், "தவறான ஒன்றுடன் தேவனுக்கு ஒருபோதும்

எந்தத் தொடர்பும் இருக்காது என்பது யாருக்கும் தெரியும். தேவன் ஒருபோதும் பொய்க்குச் சாட்சி சொல்ல மாட்டார். அது உங்களுக்குத் தெரியும்." "அது உண்மையாக இருந்தால், தேவன் உண்மைக்குச் சாட்சி சொல்வார். அது உண்மை இல்லையென்றால், தேவன் ஒருபோதும் அதற்குச் சாட்சி சொல்ல மாட்டார்" என்று சொன்னேன்.

நான் அதைச் சொன்னவுடனேயே, இதோ அவர் வந்தார். அவர்கள் அதைப் புகைப்படம் எடுத்தார்கள். பின்னர் அவர்கள் அன்று இரவு வீட்டிற்குச் சென்றார்கள், டக்ளஸ் ஸ்டுடியோவைச் சேர்ந்த ஒரு யூதரும் ஒரு கத்தோலிக்கரும். அவர்கள் படங்களை உருவாக்கினார்கள்.

அவர்கள்—அவர்கள் அங்கே வர அவரை அமர்த்தியிருந்தார்கள். அவர் தன் முஷ்டியை அந்த வயதான பரிசுத்தமான தேவ மனிதர் சகோதரர் பாஸ்வொர்த்தின் மூக்கின் அடியில் வைத்து, "என்னைப் படம் எடுங்கள்" என்று சொன்னார். "இந்த வயதானவரைத் தோலுரிப்பது போல் என் பத்திரிகையில் போட விரும்புகிறேன். நாங்கள் அவருடைய தோலை

எடுத்து, தெய்வீக சுகத்திற்கு ஒரு நினைவுச் சின்னமாக்க என் படிக்கும் அறையின் கதவில் மாட்டுவோம்" என்றார், ஒரு பாப்டிஸ்ட் போதகர். இப்போது, எல்லா பாப்டிஸ்டுகளும் அப்படி இல்லை.

58. எனவே, அவர்—விரலை இப்படி வைத்தார். அவர் அதுபோன்ற ஆறு பளபளப்பான படங்களைப் பெற்றார். அவர்கள் படங்களை உருவாக்கி வெளியே எடுத்தபோது, அந்த கேமராவை ஒரு படத்தைக்கூட எடுக்கத் தேவன் அனுமதிக்கவில்லை. அவை ஒவ்வொன்றும் நெகட்டிவ் (negative) ஆக இருந்தன.

பிறகு அவர் மற்றொன்றை வெளியே எடுத்தபோது, அங்கே கர்த்தருடைய தூதர் இருந்தார்.

அவர்கள் அனுப்பி ஜார்ஜ் ஜே. லேசியை வரவழைத்தார்கள், அவர் FBI-யின் தலைவராக இருந்தார் மற்றும் கைரேகை மற்றும் பலவற்றில் நிபுணர். அதைச் பல நாட்கள் அங்கே வைத்து ஆய்வு செய்தார். எல்லாவற்றையும் ஆய்வு செய்து திரும்பி வந்தார், ஷெல் பில்டிங்கில்

எங்களை அழைத்து, அந்த மாலையில், "ரெவரெண்ட் பிரான்ஹாம் என்பது யார் பெயர்?" என்றார். நான், "என்னுடையது" என்றேன்.

அவர் சொன்னார், "எழுந்து நில்லுங்கள்." அவர் சொன்னார், "எல்லா மனிதர்களையும் போல நீங்களும் மரித்துப் போவீர்கள்," ஆனால் சொன்னார், "கிறிஸ்தவ நாகரீகம் இருக்கும் வரை, உங்கள் படம் ஒருபோதும் சாகாது."

அவர் சொன்னார், "இது முற்றிலும்..." அவர் சொன்னார், "ஒரு அழியாத ஜீவனுக்கு அறிவியல் பூர்வமான ஆதாரம் இருக்க முடியாது என்று அந்தப் பழைய மாய்மாலக்காரர் எப்போதும் சொன்னார்," ஆனால் சொன்னார், "இனி அவர்களால் அதைச் சொல்ல முடியாது. இதோ இருக்கிறது... அந்த கேமராவின் எந்திரக்கண் (Mechanical eye) உளவியலை எடுக்காது." சொன்னார், "இது உண்மையான இயற்கைக்கு அப்பாற்பட்ட ஜீவன்." அங்கே அது இருந்தது.

இன்றிரவு அங்கே அது இருக்கிறது. அது என்ன? நான் என்பதால் அல்ல, ஆனால் நான்

நின்றுகொண்டிருந்த உண்மை அங்கே இருந்ததால். இப்போது, அது உலகம் முழுவதும் உள்ள கூட்டங்களில் காணப்பட்டது.

59. நான் சிறுவனாக இருந்தபோது, பாப்டிஸ்ட் சபையில் எனது முதல் குழுவினருக்கு ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்தபோது ஆற்றில் அது காணப்பட்டது: ஒரு மதியம் ஐந்நூறு பேர், ஜெஃபர்சன்வில்லில் ஸ்பிரிங் தெருவின் அடிவாரத்தில். செய்தித்தாள்கள் அதைப் பற்றிய ஒரு கட்டுரையை வெளியிட்டன: ஆற்றில் ஞானஸ்நானம் கொடுக்கும்போது உள்ளூர் பாப்டிஸ்ட் போதகர் மீது ஒரு மர்ம ஒளி தோன்றுகிறது.

அது பல இடங்களில் இருந்திருக்கிறது. அவர்கள் அதை ஒரு இரவு பிடித்ததை நீங்கள் மற்ற புத்தகத்தில் காண்கிறீர்கள். அது தலைக்கு மேலே இறங்கியிருந்தது. இப்போது, அது நான் என்பதால் அல்ல. இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததால் தான். இஸ்ரவேல் புத்திரரைப் பின்பற்றிய அதே அக்கினி ஸ்தம்பம் இன்றிரவு பரிசுத்த ஆவியின் சபையைப் பின்பற்றுகிறது.

மோசே இஸ்ரவேல் புத்திரரில் ஒரு தீர்க்கதரிசி மட்டுமே. அவர் இஸ்ரவேல் புத்திரர் அல்ல, அவர் அவர்களில் ஒருவர் மட்டுமே. பாருங்கள்? அக்கினி ஸ்தம்பம் மோசேயை மட்டும் பின்பற்றவில்லை. "வழியில் உன்னைக் காக்க என் தூதனை உனக்கு முன்பாக அனுப்புவேன்" என்று அவர் சொன்னாலும். ஆனால் அது மோசேக்கு மட்டும் அல்ல; அது இஸ்ரவேல் அனைவருக்கும் உரியது.

60. நாம் அனைவரும் ஒரே அழகாகச் செயல்பட வேண்டும். நாம் நம்முடைய வேறுபாடுகளை அகற்ற வேண்டும், நம்முடைய—நம்முடைய கோட்பாடுகள் மற்றும் காரியங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, நம் கைகளை ஒன்றாக இணைத்து, முன்னோக்கிச் சென்று, சர்வ வல்லமையுள்ள தேவன் நமக்குக் கொடுத்த வாக்குறுதியை எடுத்துக்கொள்ள வேண்டும். அவர் உங்களை ஆசீர்வதிப்பாராக என்பது என் ஜெபம்.

எங்கள் பரலோக பிதாவே, இன்றிரவு உமக்கு நன்றி கூறுகிறோம். நான் உடைத்து... இங்கே மக்களுக்குச் சில வார்த்தைகளைப் பேச முயற்சித்தேன் மற்றும் அவர்களின் நேரத்தை

அதிகமாக்க எடுத்துக்கொண்டேன். அவர்கள் மிகவும் அன்பான கூட்டம்.

இப்போது, இயேசு கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பின சர்வ வல்லமையுள்ள தேவனே, இன்றிரவு தேவனுடைய சிங்காசனத்தில் வீற்றிருந்து, சபை உலகிற்கு மிஷனரி ஊழியம் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறவரே, அப்போதுதான் அவர் திரும்பி வந்து, தாவீதின் சிங்காசனத்தில், தமக்கு உரிமையுள்ள தனது சொந்த சிங்காசனத்தில் அமர முடியும்.

ஆண்டவரே, இஸ்ரவேல் புத்திரருடன் வனாந்தரத்தில் இருந்த தேவ தூதரான பெரிய லோகோஸ் (Logos), உமது பிரசன்னம், அந்த நாளில் அவர்களை இயற்கையாக வழிநடத்தி, பரலோகத்திலிருந்து மன்னா கொடுத்துப் போஷித்தது போல, இன்றும் சபையை வழிநடத்தி, பரலோகத்திலிருந்து பரிசுத்த ஆவியின் மன்னாவினால்: வல்லமை, அடையாளங்கள் மற்றும் அற்புதங்களினால் எங்களைப் போஷிப்பீராக. அவருக்காக நாங்கள் உமக்கு நன்றி கூறுகிறோம்.

61. இப்போது, நீர் அவரை உமது பிரயோஜனமற்ற ஊழியனிடம் அனுப்புமாறும், இது நாங்கள் நீண்ட காலம் நினைவில் கொள்ளும் இரவாக இருக்குமாறும் நாங்கள் ஜெபிக்கிறோம். நாங்கள் கட்டிடத்தை விட்டு, எங்கள் வெவ்வேறு வீடுகளுக்குச் செல்லும்போது, எம்மாவுக்கு வந்தவர்களைப் போல, "அவருடைய பிரசன்னத்தினால் நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா?" என்று சொல்லக்கடவோம். அவருடைய நாமத்தில் இதைக் கேட்கிறோம். ஆமென்.

நான் ஒவ்வொரு இரவும் ஒன்பதரை மணிக்கு முடிக்க முயற்சித்தேன், ஆனால் நான்... ஆம்... இது எனக்குப் புதிது. கூட்டங்கள் அவ்வளவு வலுவாக இல்லை, ஏனென்றால் நான் பேச ஆரம்பிக்கிறேன், பிறகு பிரசங்கம் பண்ண ஆரம்பிக்கிறேன், நான்... இது வேறுபட்ட அபிஷேகம். ஆனால் நாம்... மேலாளர்கள் இல்லை, எனவே நாங்கள் சிறிது காலம் கஷ்டப்பட்டோம். தேவன் உங்களோடு இருப்பாராக.

இப்போது... பில்லி, நீங்கள் கொடுத்த கார்டுகள் என்ன? M 1 முதல் 100 வரையா? அவர் இன்று மதியமும் இரவும், M என்ற எழுத்தில் நூறு கார்டுகளைக் கொடுத்தார் என்று நினைக்கிறேன். சரி.

62. கார்டு வேண்டுமானால், மதியம் அல்லது மாலையில் சீக்கிரம் வாருங்கள். அவர் கீழே வந்து கார்டுகளை எடுத்து மக்களுக்குக் கொடுக்கிறார் மற்றும்—மற்றும் சும்மா... கார்டு தீர்ந்துவிட்டால், அவர் இங்கே இருக்கிறார் ஆனால் கார்டு தீர்ந்துவிடுகிறது, அவரிடம் கார்டுகள் இல்லை. பிறகு சகோதரர் ஷாரிட் வருகிறார், என்னை ஏற்றிக்கொண்டு, இங்கே இரவு கூட்டத்திற்கு அழைத்து வருகிறார். பின்னர் நாங்கள் அங்கே தொடங்கி, மேடைக்கு இவ்வளவு பேரை அழைக்கிறோம், நம்மால் முடிந்தவரை அநேகரை இங்கே மேலே கொண்டு வருகிறோம், பின்னர்—பின்னர் அவர்களுக்காக ஜெபிக்கிறோம்.

இப்போது, முக்கிய விஷயம் என்னவென்றால், நண்பர்களே, இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்திருந்தால்... இன்று காலை எனக்கு ஒரு அற்புதமான

தரிசனம் கிடைத்தது. அதைச் சொல்ல மூன்று நான்கு முறை என் மனதில் வந்தது. நான் பின்னர் காத்திருப்பேன். நான் விழித்துக் கொண்டிருந்தேன். என் மனைவி இப்போது இங்கே எங்கேயோ அமர்ந்திருக்கிறாள்.

அவள் அறையை விட்டு வெளியே சென்றிருந்தாள், அவள் இல்லாதபோது, நான் ஒரு சதுர ஒளியை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தேன். அங்கே ஒரு சக்திவாய்ந்த தரிசனம் நகர்ந்தது. அவள் அறைக்குத் திரும்பியதும், நான் அவளிடம் சொன்னேன், நாங்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையின் கீழ் நடுங்கினோம்.

63. இன்று சில சகோதரர்களிடம் அதைக் கொடுத்தேன், அதன் அர்த்தம் என்னவென்று எனக்கே தெரியவில்லை. ஆனால் அது நிச்சயமாக மகிமையாக இருந்தது. எனவே ஒருவேளை எனக்குச் சிறிது நேரம் கிடைக்கும், பின்னர், நாளை இரவு அல்லது எப்போதாவது, பேசுவதற்கு. அது என்ன? M.

நாம்... நேற்று இரவு அவற்றில் முதலாவதை அழைத்தோம் என்று

நினைக்கிறேன். நேற்று இரவு ஒன்று முதல் பதினைந்து வரை அழைத்தோமா? அதுதானே? (எதிலிருந்து அழைத்தோம்? ஒன்று முதல் பதினைந்து வரை?) இன்றிரவு அவற்றின் கடைசிப் பகுதியை எடுத்துக்கொள்வோம். அது 85 முதல் 100 வரை இருக்கும்.

M-85 யாரிடம் உள்ளது? உங்கள் கையை உயர்த்துங்கள்... 85? சரி. இங்கே வாருங்கள், அம்மையே, வரிசையில் நில்லுங்கள்...? ...86, ஜெப அட்டை M-86 யாரிடம் உள்ளது? 86, உங்கள் கையை உயர்த்துங்கள். 86? சரி, ஐயா, இங்கே. ஜெப அட்டை M-87 யாரிடம் உள்ளது? உங்கள் கையை உயர்த்துங்கள். ஜெப அட்டை 87? சரி அம்மையே, இங்கே.

88, யாரு... 88? 89, 89 யாரிடம் உள்ளது? உங்கள் கையை உயர்த்துங்கள். ஜெப அட்டை 89, M-89? நீங்கள் உங்கள்... ஒருவருக்கொருவர் கார்டுகளைப் பார்ப்பீர்களா. காது கேளாத யாராவது இருக்கலாம், அவர்களால் கேட்க முடியாது, அவர்கள்... அல்லது... இங்கே சக்கர நாற்காலிகளில் உள்ளவர்களையும் சோதிக்கவும். 89? M-89? ஜெப அட்டை M-89 வைத்திருக்கும்

எவரேனும் உங்கள் கையை உயர்த்துவீர்களா? சில ஸ்பானிஷ் மக்கள், அல்லது இந்தியர்கள், ஆங்கிலம் பேசக்கூடிய அல்லது மொழிபெயர்க்கக்கூடியவர்களின் கார்டுகளைப் பாருங்கள். பார்த்துச் சொல்லுங்கள். அவர்களுக்கு நான் சொல்வது புரியாமல் இருக்கலாம்.

64. இப்போது, மொழிபெயர்க்கக்கூடிய ஒருவர், ஏனென்றால் அது அநேகமாக தவறா... அவர்கள்... அது ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. M-89? M-89? அது தோன்றியதா? சரி.

M-89? இப்போது, நினைவில் கொள்ளுங்கள், பல முறை நான் அவர்களை அழைக்கும் போது, அவர்கள், "யாரும் என்னிடம் சொல்லவில்லை. என்—என் ஜெப அட்டை அழைக்கப்பட்டது, ஆனால் யாரும் என்னிடம் சொல்லவில்லை. நான் காது கேளாதவன்" என்று சொல்கிறார்கள். அல்லது "என்னால் எழுந்திருக்க முடியவில்லை, என்னால் நகர முடியவில்லை. யாரும் எனக்கு உதவவில்லை." எனவே நான்... நினைவில் கொள்ளுங்கள், நான் அதை அழைத்தேன். 89,

90? ஜெப அட்டை M-90 யாரிடம் உள்ளது? 91, 92, உங்கள் கைகளை உயர்த்துங்கள். 92, 93, உங்கள் கைகளை உயர்த்துங்கள். 94, 95, 96, அவ்வளவுதான். 97, 98, 99, 100. இப்போது, அவர்கள் வரிசையில் நிற்கும்போது, ஆர்கன் வாசிப்பவர் ஆர்கனுக்கு வந்தால் நன்றாக இருக்கும், இசைக்கலைஞர்.

65. இப்போது, இங்கே எத்தனை பேரிடம் ஜெப அட்டை இல்லை, ஆனால் சுகமடைய விரும்புகிறீர்கள், உங்கள் கையை உயர்த்துங்கள். நீங்கள் கவனித்தால், ஒவ்வொரு கூட்டத்திலும், மேடையில் ஒருவருக்குச் சுகம் கிடைத்தால் அங்கே வெளியே பத்து பேர் சுகமடைகிறார்கள். பாருங்கள்? நான் உங்களிடம் கேட்பது ஒன்றே ஒன்றுதான், நான் உங்களுக்குச் சொல்வது உண்மை என்று முழு இருதயத்தோடும் ஜெபித்து விசுவாசியுங்கள். தேவன்—இதைச் செய்திருக் கிறார் என்று. நீங்கள் ஒவ்வொருவரும் சுகமடைவீர்கள் என்று நான் என் முழு இருதயத்தோடும் நம்புகிறேன். கர்த்தராகிய தேவன் உங்களை ஆசீர்வதித்து அருள்வாராக.

இப்போது, நான் ஒவ்வொருவரையும் கேட்கப் போகிறேன், நீங்கள் விரும்பினால், குறிப்பாகச் சிறியவர்கள், மிகவும்... உங்களால் முடிந்தவரை அமைதியாக உங்கள் இருக்கைகளில் இருங்கள். ஏனென்றால் இது கர்த்தருடைய ஆராதனை. சரி, நீங்கள் எங்களுக்கு ஒரு சிறிய இசை கொடுத்தால் நன்றாக இருக்கும்.

66. கிறிஸ்தவர்களே... நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன். நான் உங்கள் சகோதரன். இந்தக் கூட்டங்களில், நீங்கள் எல்லாவற்றிற்கும் எதிராகப் போராடுகிறீர்கள். இதோ நீங்கள் மேடையில் நிற்கிறீர்கள், ஆவிகளின் ஒரு வங்கி (bank of spirits)... நீங்கள் தரிசனத்திற்காக ஒரு—ஒரு ஆவிக்குரிய அலைவரிசைக்குள் நுழையும்போது, எல்லோரும் ஜெபிக்கிறார்கள், சிலர் சந்தேகிக்கிறார்கள், சிலர் இந்த வழி, சிலர் அந்த வழி. நீங்கள் உணர்வதில்லை...

இயேசு ஒரு நாள் அப்படிப்பட்ட ஒரு கூட்டத்தைச் சந்தித்தார். அவர் ஒரு மனிதனைக் கையைப் பிடித்து நகரத்திற்கு வெளியே அழைத்துச் சென்றார். தரையில் துப்பி, சேறு

உண்டாக்கி, அதை அவன் கண்களில் பூசி, போய் கழுவச் சொன்னார். மறுநாள், அவன் பார்வையடைந்தவனாய் வந்தான். பாருங்கள்?

ஒரு சிறுமி இறந்துவிட்டதால் எல்லோரும் அழுது கொண்டிருந்த ஒரு இடத்திற்கு அவர் சென்றார், அவள் சாகவில்லை என்று அவர் சொன்னதால் அவரைப் பார்த்துச் சிரித்தார்கள். அவர் அவர்கள் ஒவ்வொருவரையும் வீட்டை விட்டு வெளியே அனுப்பிவிட்டு, உள்ளே சென்றார். பாருங்கள்? நீங்கள் ஒற்றுமை, இணக்கம், எல்லாவற்றையும் ஒருமனப்பட்ட நிலையில் கொண்டிருக்க வேண்டும். அப்போது பரிசுத்த ஆவியானவர் இங்கே மேடையில் ஒரு ஜெபம் தவிர வேறொன்றையும் செய்ய வேண்டியிருக்காது, எல்லாம் நடக்கும். அதுவே அதை முடித்துவிடும்.

67. நான் உண்மையைச் சொல்கிறேன் என்று நீங்கள் நம்புவீர்கள் என நான் நம்புகிறேன். நான் உண்மையைச் சொல்கிறேன் என்று தேவனுக்குத் தெரியும். சக்கர நாற்காலிகள் மற்றும் கட்டில்கள் மற்றும் படுக்கைகள் பல அடுக்குகளாகக் குவிந்திருக்கும் கூட்டங்களை நான் பார்த்திருக்கிறேன்.

மேடையில் நின்றுகொண்டே. ஆப்பிரிக்காவில், ஒரு மதியம் ஒரே ஒரு ஜெபம் செய்தேன், ஒரே ஜெபத்தில் இருபத்தைந்தாயிரம் பேர் சுகமடைந்தார்கள். மேடையில் ஏதோ நடப்பதாக அவர்கள் பார்த்தபோது, அது முடிந்துவிட்டது. அவர்கள், "தேவன் மேலே இருந்தால், தேவன் இங்கே வெளியே இருக்கிறார்" என்று சொன்னார்கள்.

ஏன், ஊன்றுக்கோல்கள், மற்றும் கட்டில்கள், மற்றும் படுக்கைகள், மற்றும் அவர்கள் வைத்திருந்த சாதனங்களை அவர்களால் அப்புறப்படுத்தக் கூட முடியவில்லை. அவர்கள் அவற்றை அப்படியே விட்டுச் சென்ற இடத்திலிருந்து அவற்றை இழுத்துச் செல்ல லாரிகள் வெளியே நின்றன, அவை குவியல்களாகக் கிடந்தன: ஒரே ஜெபம், இருபத்தைந்தாயிரம் சுகமளிப்புகள்.

இப்போது, மக்கள் வருவதற்கு வரிசையில் நிற்கும்போது, நீங்கள் ஒவ்வொருவரும் ஜெபத்துடன் இருக்குமாறு நான் விரும்புகிறேன். நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் நம்ப வேண்டும் என்று நான் விரும்புகிறேன். தேவன்

உங்களைச் சுகமாக்கப் போகிறார் என்று நம்புங்கள். தேவன் அதைச் செய்வார்.

68. ஆ, இந்த விசுவாசம் நமக்கு எல்லா நேரத்திலும் இருக்கும் என்று நம்புகிறேன். பார்வையாளர்கள் மத்தியில் அப்போதுதான் ஒரு பெண்மணி சுகமடைந்ததை நான் பார்த்தேன் (அது சரி). கர்த்தராகிய இயேசு இப்போது நம்மை ஆசீர்வதிப்பாராக.

நான்—நான் சொல்வது போல் நீங்கள் பயபக்தியுடன் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். மிகவும் பயபக்தியுடன்... தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து தேவையுள்ள அனைவரையும் சுகமாக்க இங்கே இருக்கிறார் என்று உங்கள் முழு இருதயத்தோடும் நம்புங்கள். அவரால் என்ன செய்ய முடியும்...

இப்போது, நியாயத்தீர்ப்பு நாளில், எல்லா இருதயங்களின் இரகசியங்களும் வெளிப் படுத்தப்படும் போது, சர்வவல்லமையுள்ளவர், அந்தப் படத்தில் நீங்கள் பார்க்கும் அந்தத் தூதர், இப்போது நான் இருக்கும் இடத்திலிருந்து இரண்டு அடி தூரத்தில் நிற்கிறார்.

இப்போது, தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், தேவனுடைய மகிமைக்காக நான் இங்கிருக்கும் ஒவ்வொரு ஆவியையும் என் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருகிறேன்.

69. இப்போது, பயபக்தியுடன் இருங்கள். நான் அந்தப் பெண்மணியிடம் ஒரு கணம் பேச வேண்டும். வாசல்களில் இருக்கும் அந்நியர்களுக்கு அப்பால்... இயேசு இங்கே இருந்திருந்தால், அவர் அந்தப் பெண்ணிடம் என்ன சொல்வார்? "நான் உன்னைச் சுகமாக்குவேன்" என்று சொல்வாரா?

அவரால் முடியாது, ஏனென்றால் அவர் அதை ஏற்கனவே செய்துவிட்டார். ஆனால் அவர் கிணற்றடியில் ஒரு பெண்ணிடம் ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசினார். அவளிடம் என்ன தவறு என்பதை அவர் கண்டுபிடித்து அவளிடம் சொன்னார். அவர்... பிதா அவருக்குக் காண்பிப்பதை மட்டுமே அவரால் செய்ய முடியும், அது சரியா? வேதாகமம் அதைத்தான் சொல்கிறது.

இப்போது, அவர் இன்று இங்கே இருப்பதால்... அவர் மரிக்கவில்லை, அவர் உயிருடன் இருக்கிறார். அவர் இங்கே இருக்கிறார், ஆனால் அவர் ஆவி ரூபத்தில் இருக்கிறார். அந்தப் படத்தில் நீங்கள் பார்ப்பது அவரே. பாருங்கள்? அவரே கர்த்தர், லோகோஸ், உடன்படிக்கையின் தூதன். அவர் பிரசன்னமாகி நிற்கிறார்.

இப்போது, நான் நம் சகோதரியிடம் ஒரு கணம் பேசுவேன். நீங்கள் எனக்கு அந்நியர் என்று நினைக்கிறேன், அப்படித்தானே, அம்மையே? நாம் முற்றிலும் அந்நியர்கள், ஒருவருக்கொருவர் தெரியாது? சரி.

நான் உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன், நான்... வேறு எந்த நோக்கத்திற்காகவும் இல்லை. ஆனால் நம் எஜமானர் கிணற்றடியில் இருந்த பெண்ணை அழைத்து, "எனக்குக் குடிக்கத் தண்ணீர் தா" என்று சொன்னது போல...

அவள், "கிணறு ஆழமானது. உமக்கு மொள்ள ஒன்றுமில்லை" என்றாள்.

70. அவர் சொன்னார், "ஆனால் நீ யாருடன் பேசுகிறாய் என்று உனக்குத் தெரிந்திருந்தால், நீ என்னிடம் குடிக்கக் கேட்டிருப்பாய், நீ மொள்ள வராத தண்ணீரை நான் உனக்குத் தருவேன்." கதை உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். அவர் ஏன் அதைச் செய்தார் என்று ஆச்சரியப்படுகிறீர்களா? இப்போது, என்னுடைய நேர்மையான கருத்துப்படி, ஆவியானவருடன் பழகிய பிறகு, என்ன தவறு என்று கண்டுபிடிக்க அவர் அவளுடைய ஆவியை, அவளுடைய ஆத்துமாவைத் தொடர்பு கொண்டார்.

இப்போது, அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராக இருந்தால், நான் உங்களிடம் பேசினால், அந்த அக்கினி ஸ்தம்பம் இங்கே இருந்தால், நாம் அந்நியர்களாக இருந்து ஒருவரையொருவர் அறியாமல் இருந்தால்... எனக்கு உங்களைப் பற்றி எதுவும் தெரியாது. அது உங்களுக்குத் தெரியும். அப்படியானால், பரிசுத்த ஆவியானவர் வந்து உங்கள் பிரச்சனை என்ன அல்லது அது போன்ற ஏதாவது ஒன்றை எனக்குச் சொன்னால்...

71. பிலிப்புவைப் போல, பிலிப்பு அவரிடம் வந்தபோது, அவர் சொன்னார்... போய் நாத்தான்வேலை அழைத்துக் கொண்டு வந்தார், அவன், "நாசரேத்திலிருந்து நன்மை ஏதாகிலும் வரக்கூடுமோ?" என்றான். "வந்து பார்" என்றான்.

அவர் சொன்னார்... பிலிப்பு வருவதை அவர் கண்டபோது, "இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன்" என்றார்.

அவன், "உமக்கு என்னை எப்போது தெரியும்?" என்றான்.

"பிலிப்பு உன்னை அழைப்பதற்கு முன்னே, நீ அத்திமரத்தின் கீழிருக்கும்போதே, நான் உன்னைக் கண்டேன்" என்றார்.

அது அதைத் தீர்த்துவிட்டது, இல்லையா? அவர் அதைச் சொன்னபோது, அதுவே போதுமானதாக இருந்தது.

இன்றிரவு நீங்கள் நம்புவதற்கு அது போதுமானதாக இருக்குமா? அவர் செய்வார் என்று நான் நம்புகிறேன். அதே விஷயம் தான், கிணற்றடியில் இருந்தது போல ஒரு ஆணும்

பெண்ணும் பேசிக் கொள்கிறார்கள். இன்றிரவு மீண்டும் அது அப்படித்தான் தொடங்குகிறது, ஒரு ஆண் ஒரு பெண்ணிடம் பேசுகிறார்.

72. அந்தப் பெண் ஒரு விசுவாசி. அவள், "எங்கள் பிதாவாகிய யாக்கோபு இந்தக் கிணற்றை வெட்டினார்," மற்றும் பல சொன்னாள். "அவருடைய கால்நடைகள் அதிலிருந்து குடித்தன." நீங்களும் ஒரு விசுவாசி. நான் உங்கள் சகோதரன். இப்போது, சர்வவல்லமையுள்ள தேவன் சித்தமானால், உங்கள் பிரச்சனையை வெளிப்படுத்த வேண்டும்.

இது சரியாக ஒரு பிரச்சனை அல்ல. உங்களுக்குக் கண்களில் பிரச்சனை இருக்கிறது. அது சில காலமாக இருக்கிறது. அது அஸ்டிக்மாட்டிசம் (astigmatism), நிச்சயமாக. ஆனால் நீங்கள் வேறொரு நாட்டிலிருந்து வரும் ஒருவரைப் பிரதிநிதித்துவப்படுத்த முயற்சிக்கிறீர்கள். அது ஒரு நாட்டில் இருக்கிறது... அது ஒரு பெரிய மேடு பள்ளமான நாடு, அதில் நிறைய ஏரிகள் உள்ளன. அது மின்னசோட்டா (Minnesota). அது சரியா?

அது... அவர்களுக்கு மிகவும் அரிதான ஒரு நோய் உள்ளது. உயரமான மெலிந்த ஒரு டாக்டர் அவளைக் கவனிப்பதை நான் காண்கிறேன். அது உண்மையா? அவளுக்குத் தமனிகள் வழியாக இரத்தம் செல்லாதது போல அல்லது அது போன்ற ஏதோ ஒன்று இருக்கிறது. அவர் காதுகளில் எதையோ வைத்துக்கொண்டு, அதைத் தொட்டு, தலையை அசைப்பதை நான் காண்கிறேன். அது உண்மை இல்லையா?

73. அந்தக் காரியங்கள் உண்மையாக இருந்தனவா? இப்போது, அது நான் பேசவில்லை. அது வேறு யாரோ. அது உண்மையா? என்ன தவறு என்பதை அவர் அறிந்தால், அவர் அறிவார்... என்ன இருந்தது என்பதை அவர் அறிந்தால், என்ன இருக்கும் என்பதையும் அவர் அறிவார். அது சரியா?

அது ஒரு நண்பருக்காக என்று நான் நம்புகிறேன், அது சரியா? உங்கள் கைக்குட்டையை என்னிடம் கொடுத்து இங்கே வாருங்கள். அன்புள்ள பரலோக பிதாவே, அன்பானவராகப் படுத்திருக்கும் ஒருவருக்காக, உமது வல்லமையுள்ள கரத்தால் சுகமாக்குமாறு நான் ஜெபிக்கிறேன். தேவனுடைய பரிசுத்த

ஆவியானவர் இப்போது புறப்பட்டுச் செல்வாராக. அந்த நபர் சுகமடையட்டும், தேவனுடைய மகிமைக்காக இந்தப் பெண் சுகமடையட்டும். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இதைக் கேட்கிறேன். ஆமென்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சகோதரி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. வாருங்கள்.

74. எத்தனை பேர் முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறீர்கள்? இப்போது, இங்கே உள்ள ஒவ்வொருவரும், இப்போதே, "கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிரசன்னமாகி இருக்கிறார் என்று நான் நம்புகிறேன். அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார். அவர் மரிக்கவில்லை; அவர் உயிரோடிருக்கிறார்" என்று சொல்ல வேண்டும். இன்றிரவு அவர் உங்களுக்குள் ஜீவிக்கிறார். பாருங்கள்? இது அவருடைய பிரசன்னத்தின் அத்தாட்சி மட்டுமே. உங்கள் விசுவாசத்தைத் தூண்டுவதற்காகவே அவர் இதைச் செய்கிறார்.

அவர் வார்த்தையைப் பிரசங்கிக்கிறார். பின்னர் அவர் வந்து வார்த்தையை

வெளிப்படுத்துகிறார். அவர் அறிவிக்கிறார்... அற்புதம். அந்த நபர் யாராக இருந்தாலும், அவர்கள் எவராக இருந்தாலும், எனக்குத் தெரியாது.

வெளிப்படையாக, இப்போது, அந்த நபருக்கு என்ன... தவறு, அல்லது கடந்து சென்றது யார் என்று என்னால் சொல்ல முடியாது. அது முற்றிலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட தேவனுடைய ஆவி.

இப்போது, வாருங்கள். நிச்சயமாக, அந்த மனிதரின் காதில் ஒரு ஊதுகுழல் (trumpet) இருப்பதை யாரும் பார்க்கலாம். நாம் பெறும் வரை ஒரு கணம் தலைவணங்குவோம்... நான் கேட்கும் வரை உங்கள் தலையை உயர்த்த வேண்டாம்.

தாவீது சொன்னது போல், இயேசுவைக் கல்லறையிலிருந்து கொண்டு வந்த ஓ நல்ல ஆண்டவரே, "கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி: 'நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும், நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும்' என்று சொன்னார்."

75. பிதாவே, இந்தக் பெரிய ஊதுகுழலைக் காதில் வைத்துக்கொண்டு இங்கே நிற்கும் இந்த மனிதருக்காக இரக்கமாயிருக்குமாறு நான் உம்மிடம் ஜெபிக்கிறேன். அவரை எங்காவது ஒரு வாகனத்திற்கு முன்னால் ஓட வைத்து அவரைக் கொன்று, அகால மரணத்திற்கு அனுப்பும்படி சாத்தான் இந்தத் தீமையைச் செய்திருக்கிறான். அந்த எதிரி, அவன் ஒரு பயங்கரமானவன். ஆனால் கல்வாரியில் அவனுடைய எல்லா வல்லமைகளிலிருந்தும் அவனை உரிந்துபோட்ட மகிமையான தேவகுமாரன் நீர்.

ஆண்டவரே, இன்றிரவு நீர் வாக்களித்ததை எங்களுக்குத் தருமாறு நான் ஜெபிக்கிறேன். "என் நாமத்தில் நீங்கள் எதைக் கேட்டாலும், அதை நான் செய்வேன்" என்று நீர் சொன்னீர். இந்த மனிதனைக் கட்டிப்போட்டிருக்கும் இந்தப் பொல்லாத செவிடன் ஆவி அவனை விட்டு வெளியேறுமாறு நான் கேட்கிறேன். ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், அது அவனை விட்டு விலகட்டும்.

எவ்வளவு காலமாக நீங்கள் அப்படி இருக்கிறீர்கள்? [அந்த மனிதர் சகோதரர் பிரான்ஹாமிடம் பேசுகிறார்] நீங்கள்—கர்த்தராகிய இயேசுவை நீங்கள் நம்புகிறீர்களா... சரி, நீங்கள் தலையை உயர்த்தலாம். சரி. இந்தச் சத்தம் உங்களுக்குக் கேட்கிறது. நீங்கள் முழு இருதயத்தோடும் நம்புகிறீர்களா? அவர் உங்களை நேசிக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியும், இல்லையா? ஆம், ஆம். நான் சொல்வது கேட்கிறதா?

76. இப்போது, நிச்சயமாக, உங்களுக்கு ஒரு கண் பிரச்சனையும் உள்ளது, அது உங்களைத் தொந்தரவு செய்கிறது, அது சரியா? அது உங்கள் கண்கள். உங்கள் காலில் இரத்த உறைவும் (blood clot) உள்ளது. அது சரியா? அது உங்களை விட்டுப் போய்விட்டது. ஆம், ஐயா. அது நீண்ட காலமாக அங்கே இருந்தது, ஆனால் இப்போது அது உங்களை விட்டு நீங்குகிறது.

மற்றொன்று, நீங்கள் ஒரு பயணம் செல்லத் திட்டமிட்டுள்ளீர்கள், ஒரு விமானப் பயணம். ஆம், ஐயா. உங்கள் மாமனார் இப்போதுதான் இறந்துவிட்டார், உங்கள் மாமனார் இடாஹோவில் (Idaho) வசிக்கிறார்.

அங்கிருந்துதான் நீங்கள் வருகிறீர்கள். அவர் இப்போதுதான் இறந்துவிட்டார், நீங்கள் காலையில் செல்கிறீர்கள். உங்களுக்கு இன்று செய்தி வந்தது, எனவே மகிழ்ச்சியாக உங்கள் வழியில் செல்லுங்கள். கர்த்தர்... ஆம், ஐயா, கர்த்தராகிய தேவன் உங்களை ஆசீர்வதித்து உங்களைச் சுகமாக்குவாராக.

தேவன் மீது விசுவாசம் வையுங்கள். உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசியுங்கள், நீங்கள் கேட்பதைப் பெற்றுக்கொள்வீர்கள்.

77. மூட்டுவலி உங்களை விட்டு நீங்கும் என்று நம்புகிறீர்களா? உங்களுக்கு உயர் இரத்த அழுத்தமும் இருக்கிறது, இல்லையா? ஆம், உயர் இரத்த அழுத்தம் மற்றும் மூட்டு... மற்றும்—மற்றும்—மற்றும் உங்களுக்கு ஆஸ்துமா, ஆஸ்துமா நிலை உள்ளது. அது சரியா? சரி, உங்கள் கையை உயர்த்தி, "நான் அதை ஏற்றுக்கொள்கிறேன்" என்று சொல்லுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. கர்த்தராகிய இயேசு உங்களைச் சுகமாக்குவாராக. ஆமென்.

விசுவாசம் வையுங்கள். இப்போது உங்கள் ஜெப அட்டை உங்களுக்குத் தேவையில்லை. தேவன் மீது விசுவாசம் வையுங்கள்.

குடலிறக்கம் (hernia) இருக்கிறது, இல்லையா ஐயா? அதிலிருந்து குணமாக விரும்புகிறீர்களா? அந்தக் குடலிறக்கத்தை தேவன் சுகமாக்குவார் என்று நம்புகிறீர்களா? நம்புகிறீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. நீங்கள் அதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அங்கே உட்கார்ந்திருக்கும் அம்மையே, நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? முழு இருதயத்தோடும் நம்புகிறீர்களா? நம்புகி றீர்களா? நீங்கள் சுகமடைய விரும்புகிறீர்களா? ஆம், ஐயா. பித்தப்பை பிரச்சனை மற்றும் பிற காரியங்கள், அது சரியா? சரி, நீங்கள் சுகமடைந்துவிட்டீர்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. நீங்கள் வீட்டிற்குச் சென்று சுகமாக இருக்கலாம்.

78. இப்போது, இங்கே வெளியே உள்ளவர்களே விசுவாசம் வையுங்கள். பாருங்கள்? வெளியே பரிசுத்த ஆவியின்

அபிஷேகம் இப்போது எல்லா இடங்களிலும் உள்ளது. பாருங்கள்? நீங்கள் விசுவாசத்துடன் இருந்து நம்பினால், அதுவே உங்களுக்குத் தேவை. தேவன் மீது விசுவாசம் வையுங்கள். சந்தேகிக்காதீர்கள். உங்கள் முழு இருதயத்தோடும் நம்புங்கள், தேவன் அதை நிறைவேற்றுவார். சரி, நோயாளியைக் கொண்டு வாருங்கள்.

கடினமாக முயற்சிக்கிறீர்கள், சகோதரரே. தொடர்ந்து நம்புங்கள்.

வாருங்கள், அம்மையே. சகோதரி, நாம் ஒருவருக்கொருவர் அந்நியர்களா? என் வாழ்நாளில் நான் உங்களைப் பார்த்ததே இல்லை. இப்போது, உங்களைச் சுகமாக்க, நீங்கள் வியாதியாக இருந்தால் என்னால் முடியாது. ஆனால் உங்கள் வாழ்க்கை இப்போது எனக்கு மறைக்கப்பட முடியாது. பாருங்கள்? ஏனென்றால் அது நான் அல்ல; இது ஒரு தெய்வீக வரத்தின் மூலம் நம்முடைய பரலோகத் தகப்பனின் தயவு. பாருங்கள்?

"காலை ஒன்பது மணி" என்று குறிக்கப்பட்ட ஒரு பலகையை நான்

காண்கிறேன். அது ஒரு அறுவை சிகிச்சை. அது ஞாயிறு அல்லது திங்கள், ஏதோ ஒன்று வருகிறது. அது கட்டிக்கு (tumor), அது சரியா?

இரக்கம் செய்த தேவனே, எங்கள் சகோதரிக்கு இரக்கம் பாராட்டும், அது வெற்றிகரமாக அமையட்டும், இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அவள் சுகமடையட்டும். ஆமென்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. விசுவாசித்துச் செல்லுங்கள், நீங்கள்...? ...தேவன் உங்களோடு இருப்பாராக.

79. தேவன் மீது விசுவாசம் வையுங்கள்.

நீங்கள் விசுவாசம் வைக்க முயற்சிக்கிறீர்கள். உங்களுக்கு அருகில் உட்கார்ந்திருக்கும் பெண்மணி, அவர் விரும்பினால் அந்த உயர் இரத்த அழுத்தத்திலிருந்து சுகமடையலாம். உங்கள் உயர் இரத்த அழுத்தத்திலிருந்து நீங்கள் சுகமடைய விரும்புகிறீர்களா?

அவர் உங்களைச் சுகமாக்கினார் என்று நம்புகிறீர்களா? உங்கள் கையை உயர்த்தி, "நான் அதை ஏற்றுக்கொள்கிறேன்" என்று

சொல்லுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. வீட்டிற்குச் செல்லுங்கள், இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அது குறையட்டும், நீங்கள் சுகமடையுங்கள்.

நீங்கள் மூன்று பேருக்கும் சுகம் தேவை. உங்கள் முழு இருதயத்தோடும் நம்புங்கள், நீங்கள் சென்று அதைப் பெற்றுக்கொள்ளலாம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

80. வணக்கம்? நாம் அந்நியர்கள் என்று நினைக்கிறேன்? வானங்களையும் பூமியையும் சிருஷ்டித்த சர்வவல்லமையுள்ள தேவன், இப்போது நான் யாருடைய பிரசன்னத்தில் நிற்கிறேனோ, அவருக்குத் தெரியும், அவருடைய சித்தத்தைப் பொறுத்தவரை உங்கள் வாழ்க்கை மறைக்கப்பட முடியாது என்று. அவர் அதை வெளிப்படுத்த முடியும். இப்போது...

ஓ, ஆச்சரியம். நான் இப்போது என்ன அர்த்தத்தில் சொல்கிறேன் என்பதை விளக்க முடிந்தால் நன்றாக இருக்கும் என்று விரும்புகிறேன். சந்தேகிக்காதீர்கள்.

உங்கள் ஜெபம் கேட்கப்பட்டது, அம்மையே, சிவப்பு கோட் அணிந்து அங்கே

உட்கார்ந்திருக்கிறீர்களே, அந்த உயர் இரத்த அழுத்தம், அந்த... தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களோடு இருப்பாராக.

நீங்கள் வீட்டிற்குச் செல்லுங்கள், கர்த்தராகிய தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

உங்களுக்குக் கல்லீரல் பிரச்சனை இருக்கிறது, இல்லையா, அங்கே உட்கார்ந்திருக்கிறீர்களே? தேவன் உங்களைச் சுகமாக்க விரும்புகிறீர்களா? அவர் செய்வார் என்று நம்புகிறீர்களா? சரி, அதை ஏற்றுக்கொள்ளுங்கள்.

அங்கே ஒரு விபத்து. ஒரு கார் இங்கே ஓடுவதை நான் காண்கிறேன். அது—அது ஒரு விபத்து. யாரோ ஒரு விபத்தில் இருக்கிறார்கள். இல்லை, அது... அவர்கள் இடுப்பில் காயம் அடைந்திருக்கிறார்கள். எழுந்திருங்கள், உங்கள் சுகத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. சுகமடையுங்கள்.

81. வாருங்கள். முழு இருதயத்தோடும் நம்புகிறீர்களா? சரி. நீங்கள் சிறுமிக்காக இங்கே இருக்கிறீர்கள். அந்தச் சிறுமிக்கு... அவளுக்கு

இரத்த சோகை (anemia) இருக்கிறது. அவளுக்கு லுகேமியா (leukemia) இருக்கிறது. டாக்டர்கள் அவளைக் கைவிட்டுவிட்டார்கள். உங்களுக்கே ஆஸ்துமா இருக்கிறது. நீங்கள் ஒரு செவிலியர்.

நீங்கள் மருத்துவமனையில் நோயாளியாக இருந்தீர்கள். நீங்கள் சுகமாக்கப்பட்டீர்கள். நீங்கள் பின்வாங்கிப் போய்விட்டீர்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. உங்கள் இருதயத்தை தேவனிடம் கொடுங்கள், குழந்தை குணமாகும், நீங்கள் இருவரும். போங்கள், தேவன் உங்களோடு இருப்பாராக.

விசுவாசம் வையுங்கள். முழு இருதயத்தோடும் நம்புங்கள்.

வாருங்கள். எத்தனை பேர் நம்புகிறீர்கள்? இது ஒரு அற்புதமான நேரம்... அந்த மூட்டுவலியிலிருந்து விடுபட விரும்புகிறீர்களா, அம்மையே? போங்கள், முழு இருதயத்தோடும் தேவனை விசுவாசியுங்கள், பெற்றுக் கொள்ளுங்கள். "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்வோம்.

82. சரி, வாருங்கள், அம்மையே. நாம்... தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, அம்மையே. உங்கள் வயிற்றுப் பிரச்சனை புற்றுநோயாக மாறியதை உணர்ந்து, இப்போது உங்கள் முழு இருதயத்தோடும் அவர் உங்களைச் சுகமாக்குவார் என்று நம்புகிறீர்களா? இயேசுவின் நாமத்தில், போய் சுகமடையுங்கள், இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் நம்புவதுதான்.

வாருங்கள், அம்மையே. நீங்கள் நம்புகிறீர்களா? நீங்கள் விரும்பு... தேவனுடைய தீர்க்கதரிசியாக எனக்குக் கீழ்ப்படிவீர்களா? அதை நம்புகிறீர்களா? உங்கள் கால்களைத் தரையில் தட்டுங்கள், மூட்டுவலி உங்களை விட்டு நீங்கும். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் செல்லுங்கள். சுகமாகுங்கள்.

வாருங்கள். என்னை தேவனுடைய தீர்க்கதரிசியாக நம்புகிறீர்களா? உங்கள் மூச்சை நன்றாக இழுத்து விடுங்கள். இப்போது நீங்கள் இருமவில்லை. ஆஸ்துமா உங்களை விட்டு நீங்கிவிட்டது. இயேசுவின் நாமத்தில் போய் சுகமாகுங்கள். சரி.

நீங்கள் அங்கே உட்கார்ந்திருந்தபோதே சுகமாக்கப்பட்டீர்கள், அம்மையே, தொடர்ந்து செல்லுங்கள், தேவனுக்கு நன்றி சொல்லுங்கள், ஆசீர்வதியுங்கள்.

83. "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்வோம். [சபையார், "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்கிறார்கள்] முழு இருதயத்தோடும் நம்புங்கள், நீங்கள் மகிமையைக் காண்பீர்கள்...

சத்தமிட்டு தேவனைத் துதித்துக்கொண்டு செல்லுங்கள். இந்த நேரத்தில் இங்கே உள்ள ஒவ்வொரு நபரும் சுகமடைய முடியும் என்று நான் நம்புகிறேன். முழு கட்டிடமும் பால் போல மாறுகிறது. நான் எதைப் பார்க்கிறேன் என்று என்னால் பார்க்க முடியவில்லை.

நம்புகிறீர்களா, அம்மையே? இங்கே நம்புகிறீர்களா, நீங்கள் அனைவரும்? இயேசு கிறிஸ்து இப்போது இங்கே கட்டிடத்தில் இருக்கிறார் என்று நம்புகிற உங்கள் ஒவ்வொருவரும், உங்கள் கால்களில் எழுந்து நின்று அவரை உங்கள் சுகமளிப்பவராக ஏற்றுக்கொள்ளுங்கள், நீங்கள் சுகமடைவீர்கள்.

சர்வவல்லமையுள்ள தேவனே, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், நான் ஒவ்வொரு பொல்லாத ஆவியையும் துரத்துகிறேன். நோயுற்றவர்களையும் பாதிக்கப்பட்டவர்களையும் விடுவித்து அவர்களைச் சுகமாக்கும்...இதில்